மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும்

# கனவு

இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான இதழ் 6

ஜனவரி 2017









## புதிய வருடம் புதிய வாய்ப்புகள்

2017

நன்கொடை ₹20/-

தனிச்சுற்றுக்கு மட்டும்

மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும்

# கனவு

ஜனவரி 2017

இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான இதழ் 6

விஷன் குளோபல் எம்பவர்மெண்ட் இந்தியா
சார்பாக வெளியிடுபவர்
**தே. சைலட் மோனி**
27, வெயர்லெஸ் ரோடு,
குறிஞ்சி நகர் மேற்கு, கே.கே. நகர்,
திருச்சி – 620 021, தமிழ்நாடு

விஷன் குளோபல் எம்பவர்மெண்ட் இந்தியா
சார்பாக அச்சிடுபவர்:
துர்கா கிராபிக், சென்னை
வரைகலை:
மேரிபா ஸ்கிரீன்ஸ், கடலூர்

தலைமை ஆலோசகர் மற்றும்
ஆசிரியர்:
**கிரேக் பியூ**

ஆசிரியர்கள்:
**I. ஜோசப் சகாயராஜ்**
**சுந்தர். G.**
**அப்டகீர்**
**S. சுபா**
**K. சுரேஷ் கண்ணா**
**C. ராஜாமணி**
**A. செல்வநாதன்**
**C. ஏழுமலை**
**M. கென்னடி ஜோன்ஸ்சேகர்**
**வசந்தி. B.**
**S. ஆதியா**
**P. சுரேஷ்**
**S. டெய்சி டயானா**
**S. அருளரசி**

சந்தா, விளம்பரம்,
படைப்புகள் மற்றும்
வாசகர்களின்
கேள்விகளுக்கு
**089400 51900**
என்ற எண்ணை
தொடர்பு கொள்ளவும்

இவ்விதழின்
கதைகைளில்
வரும்
பெயர்களும்
நிகழ்ச்சிகளும்
கற்பனையே.


இதழில்
வெளியாகும்
விளம்பரங்களின்
உண்மைதன்மைக்கு
கனவு இதழின்
நிர்வாகம்
பொறுப்பல்ல.

படைப்புகளை
பிரதி
எடுத்துவைத்துக்
கொண்டு
எங்களுக்கு
அனுப்பவும்.

## விஷன் இளையோர் திறன் சங்கமம்

**பரிசு பெற்ற ஓவியங்கள்**








**புதிய வருடமும்**





**புதிய வாய்ப்புகளும்**



## உள்ளே...

3 என் பேனாவிலிருந்து...
புதிய வருடமும், வாய்ப்புகளும் 4
7 செயல்திட்டம்
புதிய ஆண்டில்... வடிவமைப்போம்... 9
15 மாமனிதன் நெல்சன் மண்டேலா
சோம்பலை விரட்டிடு 18
21 டாக்டர் மீரா பத்மஜா – நேர்காணல்
...எப்போது? ... நீ யார்? 22
24 Know English... Experience Success
இளையோரும் வீட்டுக் காய்கறி தோட்டமும் 25
28 மகாகவி பாரதியார்



# என் பேனாவிலிருந்து...

அன்பார்ந்த நண்பர்களே!

கம்பளிப் பூச்சி
தன் வாழ்க்கை
முடிந்தது
என்று
நினைத்தபோது
பறந்திடத்
துவங்கியது

புதிய வருடத்தில் காலடி எடுத்து வைத்துள்ளோம். 2017ஆம் ஆண்டு உங்கள் ஒவ்வொருவருக்கும் சாதனை ஆண்டாக, புரிதல்களின் ஆண்டாக, புதிய அனுபவங்களின் ஆண்டாக, மகிழ்ச்சியின் ஆண்டாக அமைந்திட விஷன் நிறுவனம் சார்பாக உங்களை வாழ்த்துகிறேன்.

புதிய வருடத்தில் புதியவைகள் நடக்க வேண்டும் என்று நாம் விரும்புவது இயல்பு. நான் என்ன வித்தியாசமாக இந்த வருடம் செய்யப்போகிறேன்? - என்று நாம் ஒவ்வொருவரும் நம்மை கேட்டுப் பார்க்க வேண்டும்.

**புதிய வருடத்தை பயனுள்ளதாக மாற்றிட ஒரு சிறிய பயிற்சி.**

1. கடந்த வருடத்தின் கசப்பான அனுபவங்களை நினைவுகளை, மனிதர்களை அட்டவணைப்படுத்துக.

2. ஒவ்வொரு நிகழ்வாக அலசி ஆராய வேண்டும். மிகவும் மோசமான நிகழ்வுகூட நமக்கு ஒரு படிப்பினையை விட்டுச் செல்லும். அந்த படிப்பினையை உள்வாங்கிக் கொண்டு நிகழ்வினை மறந்திட வேண்டும்.

3. 2016-ஆம் ஆண்டின் வைராக்கியங்களை, தோல்விகளை, கோபங்களைத் தூக்கி தூர எறிந்துவிடு.

4. 2017ஆம் ஆண்டு செய்ய விரும்பும் ஒவ்வொரு செயலையும், சந்திக்க விரும்பும் ஒவ்வொரு மனிதர்களையும் சிறிய தாள்களில் எழுதி, இரண்டாக மடக்கி ஒரு பெட்டியில் போட்டு வையுங்கள். 2017ஆம் ஆண்டின் முடிவில் அவைகளில் எவைகளை நீ சாதித்துள்ளாய் என்று ஆராயலாம்.

2017-ஆம் ஆண்டை புத்துணர்வோடும், மகிழ்வோடும், திறந்த இதயத்தோடும், தைரியத்தோடும் எதிர்கொள்ள இந்தப் பயிற்சி உதவும். ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் இவ்வகையில் நாம் மீள் ஆய்வு செய்து அடுத்த வருடத்திற்கு திட்டமிடல் வேண்டும்.

புதிய துவக்கம் புதிய வாய்ப்புகளைத் தருகின்றது. நமது வாழ்க்கையை நாம்தான் செதுக்கிட முடியும். அதை நாம் எப்போதும் செய்திட இயலும். நாம் செய்ய வேண்டியதெல்லாம் நமது உலகப் பார்வையை கூர்மையாக்க வேண்டும். பரந்த இந்த உலகில் நமக்கான இடம் என்ன என்பதை ஆழ்ந்து சிந்தித்திட வேண்டும்.

**நம்பிக்கைகளும், வாய்ப்புகளும் புதிய வருடத்தில் குவிந்து கிடக்கின்றது; வாருங்கள்... பயன்படுத்திக் கொள்வோம்...**

**கிரேக் பியூ**, MA

**Gregory T. Buie**

Visions Executive Director / Co-Founder






# புதிய வருடமும் வாய்ப்புகளும்

எஸ். ஜெரால்டு

அன்புள்ள தம்பி, தங்கைகளுக்கு,

இதயம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள். மலரும் புத்தாண்டு உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியும், இனிமையும் நிறைந்த ஆண்டாக அமைய வாழ்த்துகிறேன்.

கனவு பத்திரிக்கை மூலம் உங்களது செயல்பாட்டினைக் கண்டு பிரமிப்பு அடைகிறேன். கனவு பத்திரிக்கையின் வளர்ச்சியும், அது ஏற்படுத்தும் தாக்கமும் மிகப் பெரிது. கனவு புதுப்பொலிவுடன் வெளிவர உழைக்கும் உங்கள் அத்தனை பேருக்கும் வாழ்த்துக்களும், பாராட்டுகளும்.

கடந்துவிட்டது 2016 – பிறந்து விட்டது 2017. பழையன கழிதலும், புதியன புகுதலும் இயற்கையின் நியதி. மலரும் புதிய ஆண்டில் உங்கள் பாதங்கள் புதிய பாதைகளை உருவாக்கப் போவதை நினைத்து மட்டற்ற மகிழ்ச்சி. இந்த புதிய ஆண்டில் வெளிவரும் உங்களது கனவு பத்திரிக்கை மூலம் புதிய வருடமும் – புதிய வாய்ப்புகளும் என்ற மையக் கருத்தின் அடிப்படையில் உங்களுடன் சில உண்மைகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.



வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் சாதனையாளர்கள் பிறப்பதில்லை – உருவாகிறார்கள். சாதனைகள் படைத்து சிகரத்தைத் தொட்டவர்கள் அத்தனை பேரும் தங்களது வாழ்வில் புதிய வாய்ப்புகளை தாங்களாகவே உருவாக்கியவர்கள். இல்லையெனில் வந்த வாய்ப்புகளை கெட்டியாகப் பிடித்து, அடிமேல் அடி வைத்து அதனைப் பயன்படுத்தி இருப்பார்கள். வாய்ப்புகளை நழுவ விடாமல் பயன்படுத்திய அவர்களால் வானத்தை வசப்படுத்த முடிந்தது. அரசியல், கலை, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் இன்று நட்சத்திரமாக ஜொலித்துக் கொண்டிருப்பவர்கள் அத்தனை பேரும் வாய்ப்புகளை பயன்படுத்தி சாதனை படைத்தவர்கள் என்பதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். நீயும் அவர்களைப் போல் நம்பிக்கை நட்சத்திரமாக உயர்ந்து நிற்க வேண்டாமா...? இதோ... உன்னைத் தேடிவரும் வாய்ப்புகளை தவறவிடாதே. வாய்ப்புகள் போனபின் நீ கண்ணீர்விட்டு கதறி அழுதாலும் திரும்பி வராது என்பதை மறந்துவிடக் கூடாது.

பிறக்கும் இப்புதிய ஆண்டில் உன்னைத் தேடி வரும் வாய்ப்புகள் எவை என்று பார்ப்போமா?

### 1. ஆண்டு இறுதித் தேர்வு

ஆண்டு இறுதித் தேர்வினை இன்னும் ஒருசில மாதங்களில் நீ எதிர்கொள்ளப் போகிறாய் என்பது உண்மைதானே. படிக்க வேண்டுமே... தேர்வு எழுத வேண்டுமே... தூக்கம் கெட்டுவிடுமே... நண்பர்களோடு விளையாட முடியாதே... வீட்டிலே தொலைக்காட்சி முன் மணிக் கணக்காக அமர்ந்து ரசிக்க முடியாதே... விரும்பிய நேரங்களில் திரைப்படங்களை பார்க்க முடியாதே... என்ற அங்கலாய்ப்பு இப்போதே உன் கண்களில் தெரிகிறது. கவலைப்பட்டு உன் கண்களை கசக்கிக் கொள்ளாதே.

ஆண்டு இறுதித் தேர்வு என்பது ஆண்டு முழுவதும் நீ பள்ளியில் கற்றதை திறம்பட எடுத்துக்காட்ட உனக்கு கொடுக்கப்படுகின்ற அருமையான வாய்ப்பு. உனக்காக நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி பாடுபட்டு உழைத்து உன்னை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைத்து அழகு பார்த்த படிக்காத மேதையான உன் தந்தையின் கரங்களை பார். அன்பை எல்லாம் அமுதாகக் கொட்டி, உச்சி முகர்ந்து உன்னை பள்ளிக்கு அனுப்பி



ஈரம் இருக்கும்வரை இலைகள் உதிர்வதில்லை... நம்பிக்கை இருக்கும் வரை நாம் தோற்பதில்லை...

வைத்து, பள்ளி முடிந்து நீ திரும்பி வரும்பொழுது உனக்காக வீதியில் காத்திருக்கும் உன் தாயின் கண்களைப் பார். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்ற சொல்லை வாழ்வாக்கி, ஏணிப்படியாக நின்று உன்னை உயரத்திற்கு அனுப்பி வைத்த ஆசிரியரின் முகத்தைப் பார். இவர்களுக்காக நீ என்ன கைமாறு செய்யப் போகிறாய்...? கைமாறுதான் கொடுக்க முடியுமா? நீ நன்றாக இறுதித் தேர்வினை எழுதி நல்ல மதிப்பெண்கள் பெறுவதை பார்த்து கண்களில் நீர் வடிய உன்னைக் கட்டியணைக்கும் பொழுது கிடைக்கின்ற ஆனந்தம்...?! அதுதான் நீ அவர்களுக்குக் கொடுக்கும் கைமாறு.

இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்கள்தான். இதுவரை விளையாட்டாக இருந்தது போதும். இனியும் முயற்சி செய்தால் போதும்... இனியும் கடினமாக உழைத்தால் போதும். இந்த வாய்ப்பினை நீ நன்கு பயன்படுத்தினால் அதுவே உன்னை உயரத்திற்கு கொண்டுவிடும் என்பதனை நினைவில் கொண்டு படிக்கத் தொடங்கு. நீ யாருக்கும் சளைத்தவனல்ல என்பதை நிரூபிக்கப்போகும் வாய்ப்பு இது என்பதனை மறந்து விடாதே.

## 2. புதிய கல்வி ஆண்டு

புதிய கல்வி ஆண்டில் நீ அடியெடுத்து வைக்கப் போகிறாய். உன்னை உருவாக்கப் போகும் அருமையான வாய்ப்பு இது. உனது வெற்றிப் பயணம் முடிந்துவிடக் கூடாது. அது தொடர வேண்டும். நீ சந்திக்கும் புதிய வகுப்பறைச் சூழல், புதிய ஆசிரியர்கள், புதிய நண்பர்கள் – எல்லாருமே உன் பயணம் தொடர கரம் கொடுத்து உதவும் சக்திகள். உனது வகுப்பறையும் ஒரு போதி மரம்தான் என்பதை நினைவில் கொள். ஞானத்தையும், சக்தியையும் அளித்து உன்னை ஓர் போர் வீரனாக வாழ்க்கை என்னும் போர்க்களத்திற்கு அனுப்பி வைக்கும் ஆற்றல் படைத்தது உன் வகுப்பறைகள். குளியலறையிலிருந்து யுரேகா... யுரேகா... எனறு சத்தமிட்டபடியே வெளியே ஓடிவந்த விஞ்ஞானி ஆர்க்கிமெடிசுக்கு கிடைத்ததைப் போன்ற புதிய கண்டுபிடிப்புகளையும், புதுமையான அனுபவத்தினையும் தர வல்லது உனது வகுப்பறைகள். அவைகள் தரும் வாய்ப்புகளை வசமாக்கி பயணத்தை இனிமையாக்கக் கற்றுக் கொள்.

## 3. கோடை விடுமுறை

கோடை விடுமுறை என்றாலே உடலுக்கும், உள்ளத்திற்கும் குதூகலம்தான். முழுமையாக ஓய்வு எடுப்பதற்கான வாய்ப்பாக இதனைப் பார்க்காதே. உன் திறமைகளை மெருகேற்ற, மேம்படுத்த கொடுக்கப்பட்டிருக்கும் வாய்ப்புகள் இந்த கோடை விடுமுறை நாட்கள். பல்வேறு விதமான பயிற்சி வகுப்புகள் – ஆடல், பாடல், ஓவியம், நீச்சல், கணினி மற்றும் எத்தனையோ திறமைகளை வளர்த்தெடுப்பதற்கான பயிற்சி வகுப்புகள் உன் பகுதியிலேயே நடைபெறலாம். இந்த வாய்ப்புகளை வசமாக்கிக்கொள். உன் கனவுகளை அடைவதற்கு இவைகளெல்லாம் நம்பிக்கையின் விழுதுகள். சுட்டெரிக்கும் சூரியன் உன் கனவுகளை சிதைக்க விடாமல் பார்த்துக் கொள். உன் கண்களை மூடிக்கொண்டு இருந்துவிடாதே. பின்னால் பார்க்கலாம் என்று இருந்துவிடாதே. இப்பொழுதே திட்டமிடத் தொடங்கு.

**நன்றே செய்... அதுவும் இன்றே செய்... எல்லாம் கை கூடும்.**

## 4. உன் நண்பர்கள்

உன் நண்பர் யாரென்று சொல்...நீ யாரென்று சொல்கிறேன். அது ஆன்றோர் வாக்கு. நல்ல நண்பர்களை வாய்ப்பாகப் பெற்று உயரத்தை அடைந்தவர்கள் அதிகம். நல்ல நண்பர்கள் உன் வாழ்க்கைக்கு அரண் போன்றவர்கள். நண்பனில்லாத வாழ்க்கை நரக வாழ்க்கையாகும். பேசி, சிரித்து, கவலைகளை பகிர்ந்துகொண்டு நீ சாயும்போது தோள் கொடுத்து உன்னைத் தூக்கி நிறுத்தி உயரத்தில் ஏற்றி விட்டு அழகு பார்க்கும் நண்பர்களால் உன் வாழ்வை அலங்கரித்துக் கொள்.

பள்ளிக்கூட பருவத்தில் நீ தேர்ந்தெடுக்கும் நல்ல நண்பர்கள் உன் வாழ்நாள் முழுவதும் ஆலம் விழுதுகளாய் உன்னைத் தாங்கிப் பிடித்துக் கொள்வர். நல்ல நண்பர்களை தேர்வு செய்ய பள்ளி நாட்களை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்.



## 5. தோல்விகளை வெற்றிப் படிகளாக்கு

தோல்வி நிலை என நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா... என்பது திரைப்படப் பாடல். தோல்விகளால் துவண்டு போகாதே. 16 முறை தோல்வியினை தழுவி, இறுதியில் வெற்றி மகுடம் சூடிய கஜினி முகமதுவை நினைத்துக் கொள். 17 முறை தோல்வியில் நனைந்து, இறுதியில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக வலம் வந்த ஆபிரகாம் லிங்கனின் நெஞ்சுறுதியினை பற்றிக் கொள். ஒவ்வொரு தோல்வியும் ஒரு பாடம் – அவற்றிலிருந்து பாடம் கற்றுக் கொள். தோல்வியால் மனமுடைந்து தன் வாழ்வை புதைத்தவர்கள் ஆயிரம் உண்டு. அவர்களின் நீண்ட பட்டியலில் உன் செல்லப் பெயர் வரக்கூடாது.

என் தோல்விக்குப் பின்னால் நான் ஒருவன் மட்டுமே இருப்பேன்... ஆனால் வெற்றிக்குப் பின்னால் நான் பட்ட ஆயிரம் வலிகள் இருக்கும் – ஏ.ஆர். ரகுமான்

பள்ளியில் ஏதாவது ஒரு பாடத்தில் தோல்வி அடைந்தால் – அது உன் விடா முயற்சியையும், உழைப்பினையும் கூர்மையாக்க கிடைத்துள்ள உன்னதமான வாய்ப்பு. அடிமேல் அடிவைத்து நடை பயிலும் ஒவ்வொரு குழந்தையும் கீழே விழுந்து எழும்போது தான் அந்தப் பிஞ்சுக் கால்கள் உறுதி கொள்கின்றன. உடலும் உரம் பெறுகின்றது. நீயும் உறுதி பெற்று, உரம் பெற்று வீர நடைப்போட வேண்டுமா?... வாய்ப்புகளை உன் வசமாக்கிக் கொள். வாழ்வு வளம்பெறும் என்பதனை மறவாதே.

தம்பி, பிறக்கின்ற ஒவ்வொரு நாளும் புது வசந்தமே. ஏதாவது ஒரு செய்தியை உனக்கு கொடுப்பதற்காக இருளைக் கிழித்துக் கொண்டு வருகிறது. நீ தான் விழித்துக் கொள்ள வேண்டும். வாய்ப்புகளை தவறவிட்டு தூங்கியே பொழுதை கழித்தவர்களை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. அவர்கள் வாழும்போதே இந்த பூமித்தாயின் மடியில் பாரமாக வாழ்க்கையை நகர்த்தியவர்கள். இறந்த பின் மண்ணோடு மண்ணாக அழிந்து போனார்கள். உனது வரலாறு எழுதப்பட வேண்டுமனால் சாதிக்கத் தொடங்கு. சாதிப்பவர்கள்தான் வரலாற்றினை உருவாக்குகிறார்கள்.

இன்று நீ வாழும் நிலையை எண்ணிப் பார். போட்டி நிறைந்த உலகம் இது. இங்கு நீ நல்லவனாகவும் – வல்லவனாகவும் இருந்தால்தான் உலகம் உன்னை மதிக்கும்.

பத்திரிக்கைகளில் வேலைக்கு ஆட்கள் தேவை என்ற விளம்பரங்களைப் பார்த்திருப்பாய். விளம்பரத்தினைப் பார்த்து பலர் விண்ணப்பம் செய்திருப்பார்கள். இருக்கின்ற அந்தப் பணியிடத்தை பிடிப்பதற்காக பலர் போட்டி போடுகிறார்கள். அந்தப் பணியிடத்தினை நிரப்புவதற்காக பல்வேறு திறமைகள் கொண்டு ஒருவரைத் தான் தேர்வு செய்து நாற்காலியில் அமர வைக்கிறார்கள். பன்முகத் திறமை உள்ளவனை சிவப்பு கம்பளம் விரித்து அரவணைக்கக் காத்திருக்கிறது பல நிறுவனங்கள். படித்து முடித்துவிட்டேன் – வேலை கிடைக்கவில்லை என்று புலம்பிக் கொண்டே பலர் இருக்கிறார்கள். படித்து முடித்து பல்வேறு திறமையால் தன்னை செதுக்கியவர்கள் எட்டாத உயரத்திற்கு சென்று கொண்டே இருக்கிறார்கள். பல திறமைகளை கொண்ட சகலகலா வல்லவனாக மாற நீ நினைத்தால் மட்டுமே முடியும். வாய்ப்புகளை தவற விடாதே.

அன்றாடம் நீ சந்திக்கும் மனிதர்கள், கேட்கும் செய்திகள், காணும் காட்சிகள், நடக்கும் சம்பவங்கள் – இவைகள் மூலம் உன்னால் ஏதாவது கற்றுக் கொள்ள முடியுமா என்று பார். உலகமே உன் காலடியில் கிடக்கும். தினமும் வகுப்பிற்கு செல்லும் பொழுது இன்று புதிதாக ஏதாவது கற்றுக் கொள்ள முடியுமா என்ற தாகத்தோடு செல். நீ தேடிச் சென்ற வாயிற் கதவுகள் உனக்காக திறக்கா விட்டாலும், சிறிய ஜன்னலாவது உனக்காகத் திறந்திருக்கும். அதன் வழி வரும் தென்றல் காற்றில் கலந்துள்ள வாய்ப்புகளை இனம் கண்டு கொள். கெட்டியாகப் பிடித்துக் கொள். நீ மேலே ஏறிச் செல்ல பயன்படும் நூல் கயிறு அதுதான் என்பதை புரிந்து கொள்.

**இறுதியாகத் தம்பி, நீ சாதிக்க வேண்டுமென்றால் எப்பொழுதும் பறந்துக் கொண்டேயிரு. பறக்க முடியவில்லை என்றால் ஓடிக்கொண்டே இரு. ஓடுவதற்கு முடியவில்லை என்றால் நடந்து கொண்டே இரு. நடப்பதற்கும் முடியவில்லை என்றால் தவழ்ந்து சென்று கொண்டே இரு. எக்காரணம் கொண்டு நீ இயங்குவதை நிறுத்திவிடாதே.**

**குளத்து நீரைவிட ஆற்றுத் தண்ணீருக்குத்தான் மதிப்பு அதிகம். இது நாடறிந்த உண்மை.**

**வாழ்க்கை என்றும்**
**சினிமாதான்**
**அதில் நீதான் என்றும்**
**நாயகன் (Hero)**

**வாய்ப்புகளைப் பயன்படுத்து - வாழ்வை வளப்படுத்து...**

## வாழ்த்துக்கள்!

## தமிழ் பழமொழி அர்த்தம் ஆங்கிலத்தில்



### துலுக்காத ஆயுதம் துருப்பிடிக்கும்

**Weapon which is not polished gets rusted.**
*A skill not put to use get wasted or*
*a property not taken care of properly goes waste.*

### வானம் சுரக்க, தானம் சிறக்கும்

**When the sky opens up and rains, charity will be abundant.**
*When it rains, the growth will be good. When growth is good it means huge profits to farmers. If huge profits mean more charity. One thing leads to another.*

### நாவு அசைய, நாடு அசையும்

**When the tounge moves, the country moves.**
*Said of powerful and influential speakers who can change the tide of history, just with their speech.*



நீங்கள் மகத்தான பணியைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை வையுங்கள்
– விவேகானந்தர்

தொடர் கட்டுரை 3

# செயல்திட்டம்



தன்னை அறியாதவன் தரணி ஆள முடியாது. நம் வலிமைகளையும் ஆற்றல்களையும் அறிந்திருந்தால் மட்டும்தான் புதிய வருடம் நமக்கு அளிக்கவிருக்கும் வாய்ப்புகளை நம்மால் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு நிமிடத்தையும் ஒவ்வொரு செயலையும் திட்டமிட்டவர்கள் தான் சாதித்திருக்கிறார்கள். அவர்களைத் தான் வரலாறு கணக்கில் வைத்துள்ளது.

செயல்திட்டம் தீட்டுவது ஒரு கலை. அக்கலையை கற்றுக்கொள்வோம் வாருங்கள். நமது இலக்கை, குறிக்கோளை அடைய செயல்திட்டங்கள் தேவை. வருவது போல் வாழ்க்கை, நடப்பது நடக்கட்டும், எல்லோருக்கும் ஆறடி நிலம்தானே – என்று சாக்குபோக்கு சொல்வது நம்மை சாதனையாளனாக மாற்றாது... மாறாக நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள அது வழிவகுத்துவிடும்.

நமது இலக்கை நிர்ணயிக்கவும், அந்த இலக்கை அடைவதற்கான பாதைகளை தேர்ந்தெடுக்கவும், இலக்கை அடைந்திட வேண்டிய கால அளவை குறிப்பதற்கும் செயல்திட்டமிடல் உதவுகின்றது.

## செயல்திட்டமிட உதவும் வழிமுறைகள்

### 1 தெள்ளத் தெளிவான குறிக்கோள்


நான் இப்போது எங்கு இருக்கின்றேன்? எங்கு செல்ல விரும்புகின்றேன் அல்லது எதை அடைந்திட முயலுகின்றேன்? – போன்ற கேள்விகள் கேட்கும்போது தெளிவான குறிக்கோள் தென்படும். நாம் தேர்ந்தெடுக்கும் குறிக்கோள்கள் அல்லது இலக்குகள் சவாலானதாக இருக்க வேண்டும். அதற்காக மிகவும் கடினமான, அடைந்திட இயலாத இலக்குகளை குறித்துக் கொள்ள வேண்டிய தேவையில்லை.

### 2 பலன் தரும் குறிக்கோள்

பலனற்ற குறிக்கோள்கள் தேவையில்லை. நமக்கு அல்லது பிறருக்கு அல்லது நாம் வாழும் சமூகத்திற்கு நமது இலக்குகள் பயன்தர வேண்டும். பயனற்ற செயல்பாடுகளில் ஈடுபடுவது நேர விரயம். எனவே, நாம் முன்னிறுத்தும் குறிக்கோள்கள் நமக்கு எத்தகைய பலன்களை தரும் என்பதை நாம் மிகவும் தெள்ளத் தெளிவாக குறித்துக் கொள்ள வேண்டும்.

### 3 பயணம் துவங்கட்டும்

இலக்கைக் குறித்த உடனே அதை நோக்கிய பயணம் ஆரம்பமாக வேண்டும். இலக்கைக் குறித்துக் கொண்டு ஆறு மாதம் கழித்து வேலைகளை ஆரம்பிப்பது நேர விரயம். ஆகவே இலக்கை குறித்தவுடன், அதை நோக்கிய பயணம் துவங்க வேண்டும்.




### 4 படிகள் (Steps) என்ன?

மிகவும் தெளிவாக ஒவ்வொரு செயல்பாட்டையும் வரையறுத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக– தேசியப் புகழ்பெற்ற கல்லூரி ஒன்றில் பேராசிரியராக வேண்டும். அதை அடைந்திட நாம் கடந்து செல்ல வேண்டிய படிகள் என்ன என்பதை தெளிவாகக் குறித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு படிகளாகக் கடக்க வேண்டும்.

### 5 படிநிலை ஒவ்வொன்றிலும் உன்னை பாராட்டிக் கொள்

இலக்கை நோக்கிய பயணத்தில், ஒரு படிநிலையை கடந்தவுடன் நின்று நிதானித்து நம்மை நாமே பாராட்டிக் கொள்வதும், ஓய்வெடுப்பதும், தவறுகளை சரி செய்து கொள்வதும் மிக முக்கியமானதாகும். உன்னையே நீ உற்சாகப்படுத்திக் கொண்டு, இன்னும் திட்டம் தீட்டிக் கொண்டு அடுத்த படிநிலையை கடந்திடத் துவங்கு.

### 6 வழி ஒன்றல்ல, பல உண்டு

இலக்கை அடைந்திட வழி நிச்சயமாக ஒன்றானதாக இருக்க முடியாது, பல்வேறு பாதைகள் இருக்கும். நாம்தான் அவைகளை அடையாளப்படுத்திட வேண்டும். சாதகமான, இலகுவான, சவாலான, மகிழ்விக்கக் கூடிய பாதையை நாம்தான் தேர்வு செய்து கொள்ள வேண்டும். 2017 இல் வாய்ப்புகள் கோடி... மறந்திடாதே.

## 7 படிநிலை ஒவ்வொன்றிலும் பிரச்சனைகள்

ஒவ்வொரு படியாகக் கடந்திட கவனமுடன் செயலாற்றும்போது அந்த படிநிலைக்கான பிரச்சனைகளும் நிச்சயமாக இருக்கும். அப்பிரச்சனைகள் நமக்குள்ளோ அல்லது நமக்கு வெளியிலேயோ காணக் கிடக்கலாம். அதை முன்கூட்டியே அறிந்திருந்தால் அவைகளை மிகவும் எளிதாகக் கையாளலாம்.

## 8 முன்னேறிச் செல்வதை மீள் ஆய்வு (Review) செய்

இலக்கை நோக்கிய நமது பயணத்தில் எந்தளவிற்கு முன்னேறி இருக்கின்றோம், தேக்கநிலை உள்ளதா? இருந்தால் தேக்க நிலைக்கான காரணம் என்ன? சந்தித்த சவால்கள் என்ன? சவால்களை எப்படிக் கையாண்டாய்? – போன்ற விஷயங்களை உன் டைரியில் குறித்துக் கொள். இலக்கை நோக்கிய பயணத்தின்போது தோன்றும் புதிய கருத்துக்களை, வாய்ப்புகளை குறித்துக் கொள்.

## 9 நேர்மறை (Positive) மனிதர்களுடன் உறவாடு

எப்போதும் எதற்கும் எதிர்மறையான கருத்துக்கள் கொண்டவர்களை உன் பக்கத்தில் அனுமதியாதே. நேர்மறையாக சிந்திப்பவர்கள், சின்னஞ்சிறு விஷயங்களையும் பாராட்டி உற்சாகப் படுத்துகிறவர்கள், துவண்டு விழும்போது தூக்கி நிறுத்துபவர்கள், நல்லதே நினைப்பவர்களுடன் உறவாடு, உரையாடு. அப்போதுதான் வாழ்வு வளம் பெறும், நமது பாதை பலப்படும்.

### செயல்திட்டமிட உதவும் அட்டவணை

| | | |
|---|---|---|
| என் குறிக்கோள் / இலக்கு: | | |
| இலக்கை அடைந்திடத் தேவையான படிகள்:<br>1.<br>2.<br>3.<br>4.<br>5. | | |
| என் திட்டத்தை யாருடன் பகிர்ந்து கொள்ளப்போகிறேன்?<br>1.<br>2. | | |
| என் செய்திட்டம் ஆரம்பிக்கப்போகும் நாள்: | | |
| படி | எப்போது கடந்திடுவேன்? | நான் எனக்குக் கொடுக்கும் வெகுமதி என்ன? |
| | | |
| | | |
| எத்தகைய பிரச்சனைகள் வரக்கூடும்? அதனைத் தீர்ப்பது எப்படி? | | |

## 10 நண்பர்களுடன், உறவினர்களுடன் உனது இலக்கை பகிர்ந்துகொள்

பாதை கடினமாகும்போது, நாம் சோர்ந்து போகும்போது பிறர் உதவி செய்திட, இலக்கை பிறருடன் பகிர்ந்து கொள்வது முக்கியமாகும்.




சரியான துவக்கம், பாதி பாதையைக் கடந்ததற்குச் சமம்
*- Mary Poppins*

சரியான இலக்கு இல்லையென்றால், நீ உனக்குள் புதைந்திருக்கும் திறமைகளை உணரப் போவதில்லை
*- Winnie the Pooh*

உள்நோக்கம் (Motivation) நமது பயணத்தை துவங்க உதவுகிறது. பழக்கம் (Habit) அந்தப் பயணத்தை தொடர உதவுகின்றது *- Jim Ryun*

ஆயிரம் மைல் தூரப் பயணம் ஒரு சின்ன அடியோடு (Small Step) துவங்குகிறது *- Lao Tzu*


வெற்றி இரவும் பகலுமாக நாம் மேற்கொள்ளும் பல்வேறு முயற்சிகளின் கூட்டு *-Robert Collier*

**ஒரு செயலை செய்திட சரியான நேரம் - இப்போது Now -**

இலக்கை நோக்கிய உங்களது பயணம் உற்சாகத்தோடு தொடர்ந்து நடக்கட்டும்

**வெற்றி நிச்சயம் உங்களுடையதாகும் 2017 – அள்ளித்தரும் வாய்ப்புகளை மகிழ்வுடன் அள்ளிக்கொள்வோம்**

உங்கள் பயணத்தில் சக பயணியாக...
**தே. சைலட் மோனி**



# புதிய ஆண்டில் சிகரம் நோக்கி... எதிர்காலத்தை வடிவமைப்போம்

**செபா. சிகரம்**

புதிய ஆண்டு பிறந்திருக்கிறது. எதிர்காலம் பற்றிய கனவுகள் நம்மிடம் நிறைந்து காணப்படுகின்றது. கண்முன்னே நம்பிக்கைத் தரும் உயர் படிப்பு வாய்ப்புகளும், நிறைவு தரும் வேலை வாய்ப்புகளும் கொட்டிக் கிடக்கின்றன. சாதிக்க வேண்டுமென்றால் கனவுகள் தெளிவான குறிக்கோள்களாக, இலக்குகளாக, திட்டங்களாக பரிணமிக்க வேண்டும். எனவே முதலில் நம் எதிர்காலத்தை நாமே வடிவமைப்போம்.

மனிதன் அறிவை பயன்படுத்தி சிந்திக்க தொடங்கியதில் இருந்து இந்த பூமியும் மனித சமுதாயமும் பெரும் வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. விஞ்ஞானப் பூர்வமான அணுகுமுறைகளே வளர்ச்சிக்கு அடித்தளமிடுகின்றன. மனித வாழ்வின் அத்தனை பிரச்சனைகளுக்கும் அறிவியல் பூர்வமாக தீர்வு காணும் காலகட்டம் இது.

எதிர்காலத்தை வடிவமைப்பதற்கும், திட்டமிடுவதற்கும் அறிவியல் அணுகுமுறையே பின்பற்றப்பட வேண்டும். வெறும் ஆசைகளும், பகற்கனவுகளும் எதிர்காலமாகி விடாது. பெற்றோரின் ஆசைகளும், திணிப்புகளும் சிறந்த எதிர்காலத்தை தர முடியாது. நண்பர்களுக்காய் எதிர்காலத்தை தேர்வு செய்தவர்கள் வெற்றி பெற முடியாமல் திணறுவதைக் காண்கிறோம்.




மனிதன் ஒவ்வொருவனும் தனித்துவம் மிக்கவன். தேர்ந்து தெளிந்து சரியான குறிக்கோளை தேர்வு செய்தவர்களே வெற்றி பெறுகிறார்கள். தன்னுடைய இலட்சியத்தின் அடிப்படையில் தன் உள்மன விருப்பங்களையும், திறமைகளையும், பலவீனங்களையும் கணக்கிலெடுத்து வாய்ப்புகளை கண்டுபிடித்து சவால்களையும் எதிர் கொண்டவர்களே வெற்றி பெறுகிறார்கள்.

## இயல்பான நாட்டம்
**Aptitude**

மனிதன் ஒவ்வொருவனுக்கும் தனக்குள்ளே இயல்பான நாட்டம் (Aptitude), உள்மன விருப்பம் (Interest) இருக்கிறது. இது மனிதருக்கு மனிதர் வேறுபடுகிறது. ஒரு மனிதனின் வெற்றியின் துவக்கமே தன் நாட்டம், விருப்பம் எந்த துறையை அல்லது வேலையை நோக்கி அமைந்திருக்கிறது என்பதை அறிவதில்தான் இருக்கிறது. அதற்கு ஆழமான சுயதேடல் (Self Search) தேவை. இதற்கு உதவி செய்ய பல கேள்வித் தொகுப்புகள் உள்ளன. ஒருவன் தம்முடைய சிந்தனை, கனவுகள், எதிர்பார்ப்புகள், விருப்பங்கள் இவற்றை ஒரு மாதம் தொடர்ந்து ஆய்வு செய்தாலே தன் இயல்பான நாட்டத்தைக் கண்டுபிடிக்க முடியும்.

## SWOT ஆய்வு

சரியான குறிக்கோளை தேர்வு செய்யவும், குறிக்கோளை சரியாக வடிவமைக்கவும் **SWOT** ஆய்வு உதவியாக இருக்கும். எதைப் படிப்பது? எந்தத் துறையை தேர்வு செய்வது? எந்த வேலையை தேர்வு செய்வது? என்பதற்கு இந்த ஆய்வை பயன்படுத்தலாம்.

**S-Strength –பலம்:** தன்னிடமுள்ள திறமைகள், திறன்கள், ஆற்றல்கள், நல்ல பண்புகள் இவற்றை பட்டியலிட வேண்டும். தொடர்ந்து குறிப்பிட்ட படிப்புக்கு, வேலைக்கு தேவையான திறன்கள் உள்ளனவா? என ஆய்வு செய்ய வேண்டும்.


**W-Weakness –பலவீனம்:** தன்னிடமுள்ள பலவீனங்கள், குறைபாடுகள் எவையெனக் காண்பது. குறிப்பாக, குறிப்பிட்ட படிப்பை, வேலையை தேர்வுச் செய்ய தடையாக தன்னிடம் காணும்

*நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும், எப்போதும் மண்டியிடுவதில்லை*
– டாக்டர் அப்துல் கலாம்

பலவீனங்கள் என்ன? இவற்றில் மாற்ற முடிகிற பலவீனங்கள் எவை? என்பதையெல்லாம் ஆய்வு செய்ய வேண்டும்.

**O-Opportunities –வாய்ப்புகள்:** இது வாய்ப்புகளின் காலம் என்பார்கள். என்னென்ன புதிய துறைகள் உருவாகி வருகின்றன. குறிப்பிட்ட படிப்பை தேர்வு செய்தால் என்னென்ன வேலை வாய்ப்புகள் உள்ளன என்பவற்றை அறிய வேண்டும். இதற்கு படிப்பு மற்றும் வேலை வாய்ப்பு சம்பந்தப்பட்ட புதிய தகவல்களை திரட்ட வேண்டும்.

**T-Threats –சவால்கள்:** வாழ்வு என்பது சவால்கள் நிறைந்தது. குறிப்பிட்ட படிப்பை படிக்க ஏற்படும் சவால்களை நாம் குறித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு சவால்களையும் களைந்திட முற்பட வேண்டும். அதற்குத் தேவையான திறன்களையும் உறவுகளையும் உருவாக்கிக் கொள்ளவேண்டும்.




மேற்குறிப்பிட்ட படத்தில் கூறியபடி ஆய்வுகளின் அடிப்படையில் எதிர்காலத்தை வடிவமைக்க வேண்டும். எதிர்காலத்தை அதாவது குறிக்கோளை தேர்வு செய்தபின் நீண்ட கால, குறுகிய கால இலக்குகளை தீர்மானிக்க வேண்டும். உதாரணமாக 11–ம் வகுப்பில் அடியெடுத்து வைக்கும் ஒருவர் வானூர்தி பொறியியல் துறையில் ஒரு விஞ்ஞானியாக (Aeronautical Scientist) உயர வேண்டும் என்ற குறிக்கோளை தேர்வு செய்கிறீர்கள் என்றால் IIT–ல் படிக்க வேண்டும் என்பதை நீண்டகால இலக்காக முன்வைத்து IIT நுழைவுத்தேர்வுக்கு தன்னை தயார்படுத்த வேண்டும். +2வில் 1100–க்கு மேல் மதிப்பெண்கள் பெறுவது என்ற குறுகிய இலக்கை முன்வைத்து செயல்பட வேண்டும். அதே வேளையில் இலக்குகள் SMART ஆக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

**S-Specific** இலக்கு எப்போதும் திட்டவட்டமானதாக, குறிப்பிட்டதாக, தெளிவாக நிர்ணயிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். உதாரணமாக, படிக்கும்போது குறிப்பிட்ட நேரத்திற்குள் என்னென்ன பாடங்களை படித்து முடிக்க வேண்டுமென நிர்ணயித்துக் கொள்வது.

**M-Measurable** இலக்கு அளவிடப்படக் கூடியதாக அமைய வேண்டும். நிர்ணயித்திருக்கும் இலக்கை அடைந்திருக்கிறோமா? என்பதை அளவீடு செய்யவும், திறனாய்வு செய்யவும் வாய்ப்பிருக்க வேண்டும்.

**A-Action Oriented** இளம் பருவத்தில் செயல் வேகம், உயிர்த்துடிப்பு அதிகமாக இருக்கும். இலக்கு செயல்பாட்டைத் தூண்டுவதாக இருக்க வேண்டும்.

**R-Realistic** இலக்கு எதார்த்தமானதாக, நடைமுறையில் சாத்தியமானதாக இருக்க வேண்டும். தன்னால் இயலக்கூடியதை இலக்காக முன்வைத்து செயல்பட வேண்டும்.

**T-Time Bound** இலக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்கக் கூடியதாக அமைக்கப்பட வேண்டும்.

### வேண்டாம் கவனச்சிதறல்

குறிக்கோளை வடிவமைப்பதும், இலக்குகளை நிர்ணயிப்பதும் மிக எளிது. ஆனால் அவற்றை அடைய வேண்டும் என்றால் முழுக் கவனமும் குறிக்கோளை நோக்கியதாக இருக்க வேண்டும். திறன்களும் அறிவாற்றலும் மிக்க பலர் வெற்றி பெறாமைக்குக் காரணம் கவனச் சிதறலே. ஆங்கிலத்தில் சொல்வார்கள் **'Be Focussed'.** அதாவது குறிக்கோளை அடைவதிலேயே எப்போதும் குறியாக இருப்பது. குறிக்கோளை தேர்வு செய்யுங்கள். அந்தக் குறிக்கோளே வாழ்வு என்று நினையுங்கள். எதிர்காலம் உங்கள் கையில்தான்.

உயர் படிப்பு வாய்ப்புகள் ஏராளம் ஏராளம் கொட்டிக் கிடக்கின்றன என்று ஏற்கனவே சொன்னேன். குறிக்கோளை வடிவமைப்பதற்கு என்னென்ன சிறந்த துறைகள், படிப்புகள் உள்ளன என்பதை முதலில் தெரிந்து கொள்வோம்.

சற்று விரிவாகவே ஒவ்வொரு துறையாக தொடர்ந்து எழுதுகிறேன். முதலில் பொறியியல் துறை மற்றும் படிப்புகள் பற்றி கூறுகிறேன்.



## பொறியியல் வாழ்வின் இலட்சியமாக...

### பொறியியல் கல்வியின் சிறப்புகள்

பொறியாளர் (Engineer) சமூகத்தில் மிகுந்த மதிப்பும் மரியாதையும் அறிவும் உடையவராக கருதப்படுபவர். இன்றைய உலகில் மனித வாழ்வின் சகல அம்சங்களையும் வசதிகளையும் உருவாக்குவதில் இவர்களுடைய பங்கு மிகப் பெரியது. கட்டுமானப் பணி, பொழுதுபோக்கு, மருத்துவம், தொலைத்தொடர்பு, தொடர்பு ஊடகங்கள், நவீன போக்குவரத்து, வான்வெளி ஆராய்ச்சிகள் என இவர்களது சாதனைப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. வேகமாக வளர்ந்து வரும் துறையாகவும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் துறையாகவும் பொறியியல் துறை இருக்கிறது.

இன்றைக்குக் கட்டமைப்புத் துறையில் (Infrastructure) ஏற்பட்டுள்ள அபரிமிதமான வளர்ச்சியினால் பெரும் எண்ணிக்கையில் பொறியாளர்கள் தேவைப்படுகிறார்கள். பொறியியல் பட்டப்படிப்பு பல்வேறு விதமான வேலைவாய்ப்புகளுக்கு அடிப்படையாக உள்ளது. அண்மைக் காலத்தில் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு (Information Technology) இணையாக கட்டுமானப் பொறியியல் (Civil),



நீங்கள் மகத்தான பணியைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை வையுங்கள்
– விவேகானந்தர்

மின் பொறியியல் (Electrical), மின்னணுப் பொறியியல் (Electronics), இயந்திர பொறியியல் (Mechanical), வான்வெளி பொறியியல் (Aerospace) துறைகளிலும் அதிகமான பட்டதாரிகள் தேவைப்படுகிறார்கள்.

## பொறியாளர்கள் செய்ய வேண்டியது என்ன?

மக்களுக்கும் சமூகத்திற்கும் பயன்படக்கூடியவற்றையும் புதுமையானவற்றையும் விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்து வடிவமைத்து உற்பத்தி செய்வதே பொறியாளர்களின் தலையாய கடமையாகும். இயந்திரங்கள், கட்டமைப்புகள் போன்றவையும் இவற்றுள் அடங்கும். இவர்களின் படைப்புகள் பொருளாதார ரீதியாக வெற்றி பெற வேண்டும். மேலும் வாழ்வாதாரங்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படுத்தாத விதமாகவும் இருக்க வேண்டும்.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளையும் வர்த்தகப் பயன்பாட்டிற்கானவற்றையும் இணைத்து சமுதாயத்தின் தேவையை பூர்த்தி செய்வதே ஒரு பொறியாளரின் பணியாகிறது.

வடிவமைப்புத் துறை மட்டுமல்லாது பொருட்களின் தரம் பரிசோதித்தல், உற்பத்தி, மேம்பாடு போன்றவற்றிலும் இவர்களின் பணி இன்றியமையாததே. இவர்கள் தொழிற்சாலைகளில் உற்பத்தியை மேற்பார்வை செய்வது, தரமற்ற பொருட்களின் காரணத்தைக் கண்டறிவது, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைச் சோதனை செய்து தரத்தினை நிர்ணயிப்பது, தொழிற்திட்டங்கள் மூலம் நேரம் மற்றும் செலவினத்தை முன்கூட்டியே ஆய்வு செய்வது போன்றவற்றையும் செய்கிறார்கள்.

நவீன கால பொறியாளர்கள் கணினியைத் தான் பெருவாரியாக உபயோகிக்கிறார்கள். வடிவமைப்புகளை ஆய்ந்து அறிவதற்கும் உருவாக்குவதற்கும், இயந்திரங்களைச் சோதனை செய்வதற்கும், உதிரி பாகங்களின் முக்கியத்துவத்தினை விளக்குவதற்கும் பெரும்பாலும் கணினிதான் உபயோகிக்கப்படுகிறது.

அதிகமான ஆற்றலோடும், செயல்பாட்டு திறனோடும் விளங்கும் பொருட்களை நானோ டெக்னாலஜி (Nano Technolgoy) மூலம் உருவாக்க முடியும். அணுக்களையும் (Atoms) மூலக்கூறுகளையும் (Molecules) ஒன்றிணைத்து வடிவமைப்பில் புதிய வளர்ச்சியினை கண்டிருக்கிறார்கள் இன்றைய விஞ்ஞானிகள்.

## உலகமயமாக்கலும் பொறியியல் கல்வியும்

இன்றைய உலகமய, தாராளமய, தனியார்மய சூழலில் இந்தியாவின் பொறியியல் கல்வி நிச்சயமாக பெரும் வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இந்தியப் பல்கலைக் கழகங்கள் உலகின் பல்வேறு கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு வைத்து, கூட்டுக் கல்வியை மாணவர்களுக்கு வழங்குகிறது.

பொறியியல் கல்லூரிகள் நாடு முழுவதும் நிறையவே வந்து விட்டன. ஆனால் இவற்றிற்கு முதுகலைப் பட்டம் மற்றும் PhD பட்டம் பெற்ற சிறந்த ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். பல கல்லூரிகளில் தரம் வாய்ந்த கட்டமைப்புகளும், தகுதி வாய்ந்த ஆசிரியர்களும் இல்லை. ஆசிரியர்கள் தொடர்ந்து ஆய்வு செய்கிறவர்களாகவும், தங்களைப் புதுப்பித்துக் கொள்கிறவர் களாகவும் இருக்க வேண்டும்.

சிறந்த பட்டதாரிகள் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளுக்குச் சென்றுவிடுவதால் இந்திய பொறியியல் கல்வி நிறுவனங்களில் தரமான ஆசிரியர்கள் இல்லாமல் கல்வியின் தரம் பாதிக்கப்பட்டு விடுகிறது. இந்நிலை விரைவில் சீர் செய்யப்படாவிட்டால் நமது நாட்டின் பொறியியல் கல்வியின் தரம் நிச்சயமாக கேள்விக்குறியாகி விடும்.

அதிவேக இன்டெர்நெட் இணைப்புகள் மற்றும் கண்ணாடியிழைக் கேபிள்கள் ஆகியவை பெரிய பெரிய கோப்புகளை உலகின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு விரைவாக அனுப்பும் வசதியை அளித்திருக்கிறது. இதனால் நாடுகளுக்கிடையே பணி புரியும் வாய்ப்பு மிகவும் எளிதாக உள்ளது. தொலைதூரத்தில் இருக்கும் நிறுவனத்திற்காக கணினி முன்னிருந்து உழைக்கும் வர்க்கம் இன்று பெருகிவிட்டது.

உலகமயமாக்கலினால் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலம் கல்வி நிறுவனங்கள் உலகத் தரமிக்க பொறியியல் கல்வியை மாணவர்களுக்கு வழங்க இயலும். பொறியியல் துறையைப் பொறுத்த வரையில் வெறும் ஏட்டுக் கல்வியிலிருந்து நாம் வெளியே வர வேண்டும். தொழிற்சார்ந்த பிரிவுகள் முக்கியமானதாக மாற்றப்பட வேண்டும். தொழில்நுட்பத் தேவைகள் அடிப்படையில் பாடத்திட்டங்களில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

## பொறியியலை விரும்புபவர்களுக்கு ஆலோசனைகள்

ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கில் மாணவர்கள் பொறியியல் பட்டத்துடன் வெளியே வருகிறார்கள். பொறியியல் முடித்தவர்களெல்லாம் பொறியியல் வல்லுநர்களாக சிறப்பு பெறுவதில்லை. இவர்களுடைய தரம் நிர்ணயிக்கப்பட வேண்டும். பொறியாளர்களிடையே ஏற்படும் வேலையின்மைக்கு அவர்களுடைய கல்வியின் தரமற்ற நிலையே காரணமாகும். பல நிறுவனங்களில் தரமற்ற கல்வியே வழங்கப்படுகிறது. 20-25% வரையிலான பொறியாளர்கள் மட்டுமே வேலைவாய்ப்பு பெறுகின்றனர். இந்தப் போட்டி நிறைந்த உலகில் திறமை வாய்ந்தவர்களும் தொலைநோக்குப் பார்வையுடையவர்களும் மட்டுமே சிறந்து விளங்க முடியும்.

வெறும் பாடங்களில் மட்டும் வெற்றி பெறுவதால் அல்லது மதிப்பு பெறுவதால் ஒருவர் சிறந்த பொறியாளர் ஆகிவிட முடியாது. தான் சார்ந்திருக்கும் துறையில் கூடுதலாகத் தகவல் சேகரிப்பு மிகவும் முக்கியம். தகவல் பரிமாற்றத் திறன் போன்றவற்றையும் வளர்க்க வேண்டம். தன் துறை மூலம் சமூகத்திற்கு சேவைச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் வேண்டும்.

## பொறியியல் - சிறந்த லட்சியம் ஏன்?

ஒரு மாணவன் 10 மற்றும் +2-ம் வகுப்புகளில் 70% மதிப்பெண் வாங்கி கணிதம் மற்றும் அறிவியல் பிரிவில் சிறந்த அறிவும் இருக்குமானால் பொறியியலைத் தேர்ந்தெடுக்கலாம். கணிதம் மற்றும் அறிவியல் அடித்தளம் இல்லாதவர்கள் பொறியியில் துறையில் சிறந்து விளங்குவது கடினம்.

தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்கள் மாணவர்களுக்குச் சிறந்த அடித்தளமாக அமையும். மாணவர்களின் ஆளுமையை வளர்க்க உதவும், தன்னம்பிக்கையை வளர்க்கும். எனவே பொறியியல் ஒரு மாணவனை நல்ல மனிதனாக இச்சமூகத்திற்கு அடையாளம் காட்டும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. எனவே கல்லூரிகளைத் தேர்வு செய்வதில் எப்போதும் கவனமாகச் செயல்பட வேண்டும்.

# முக்கிய பொறியியல் படிப்புகள்...



## BE Civil Engineering
**(பொதுப் பொறியியல் அல்லது கட்டடப் பொறியியல்)**

கட்டடம் மற்றும் கட்டடக்கலை சம்பந்தப்பட்ட படிப்பு இது. கட்டுமான வடிவமைப்பு, பராமரிப்பு, கட்டுமான வழிமுறை, கட்டுமானங்களை ஆய்தல், பழுது பார்த்தல் பற்றியும் சாலைகள், கால்வாய்கள், நீர்த்தேக்கங்கள், பாலங்கள், துறைமுகங்கள், விமானத் தளங்கள் பற்றியும் கற்றுத் தரப்படுகிறது. அடிப்படை பொறியியல் படிப்பான இது அதிக வேலைவாய்ப்பைத் தரும் படிப்புகளில் ஒன்று.

## BE Computer Science & Engineering
**(கணினிப் பொறியியல்)**

கணினி சார்ந்த பொறியியல் படிப்பாகும். கணினி தொழில்நுட்பம், மென்பொருள் (Software), வன்பொருள் (Hardware), Computer Languages, இணையதளம் மற்றும் Computer Programming ஆகியவற்றை உள்ளடக்கிய படிப்பாகும். கணினி உலகையே ஆளும் வல்லமை பெற்றிருப்பதால் கொடிக்கட்டிப் பறக்கும் துறையாகவும், வேலைவாய்ப்பைப் பெற்றுத் தரும் துறையாகவும் கருதப்படுகிறது.

## BE Electrical Engineering **(மின் பொறியியல்)**

இது மின்சாரம், மின்சாரம் சார்ந்த கருவிகள், மின்சாரத்தால் இயங்கும் அதிநவீனக் கருவிகள், அவற்றின் பராமரிப்பு, வடிவமைப்பு, பழுதுபார்ப்பு போன்றவை சார்ந்த படிப்பாகும். மின்சாரம் இல்லாத உலகை எண்ணிப் பார்க்க இயலாது. மின்சாரம் தேவைப்படாத துறையே இல்லை. அதிகமான வேலை வாய்ப்பைத் தரும் படிப்பாகும்.

## BE Electronics Engineering
**(மின்னணு பொறியியல்)**

மின்னணுவியல் பற்றிய பாடப்பிரிவாகும். மின்னணு கருவிகள் வடிவமைப்பு, உற்பத்தி, செயலாக்கம் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். மேலும் கணிப்பொறி வன்பொருள், மென்பொருள் மற்றும் Computer Programmingபற்றியும் கற்றுத் தரப்படுகிறது.

## BE Electricals & Electronics Engineering
**(மின் & மின்னணு பொறியியல்)**

மின்னியல் மற்றும் மின்னணுவியல் ஆகிய இரண்டு பாடப் பிரிவுகளையும் உள்ளடக்கிய பாடப் பிரிவாகும். மின் உற்பத்தி அமைப்புகள், மின் ஆற்றல் பகிர்வு, ஆற்றல் மின்னணுவியல் போன்றவையும் கற்றுத் தரப்படுகிறது. அதிகமான வேலை வாய்ப்பைத் தரும் படிப்புகளில் இதுவும் ஒன்றாகும்.

## BE Electronics & Communication Engineering
**(மின்னணு & தகவல் தொடர்புப் பொறியியல்)**

மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு ஆகிய இரண்டு பாடங்களையும் உள்ளடக்கிய பாடப்பிரிவாகும். இன்றைய தகவல் தொடர்பு வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம் இத்துறைதான். அதிகமான வேலைவாய்ப்பைப் பெற்றுத் தரும் படிப்பாகும்.

## BE Mechanical Engineering
**(இயந்திரப் பொறியியல்)**

தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள், உற்பத்தி வழிமுறைகள், வடிவமைப்பு, பராமரிப்பு, உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றைப் பற்றிய படிப்பாகும். கணிப்பொறி பயன்பாடு மற்றும் இயந்திரங்கள் ஆய்வு செய்தல் பற்றியும் கற்றுத் தரப்படும். அதிகமான வேலை வாய்ப்பைப் பெற்று தரும் பாடங்களில் இதுவும் ஒன்று.

## BE Marine Engineering **(கப்பற் பொறியியல்)**

கப்பலைப் பற்றிய பொறியியல் படிப்பாகும். கப்பல் தொழில் நுட்பம், இயக்கம், பராமரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய படிப்பாகும். சிறந்த எதிர்காலத்தை மாணவர்களுக்கு வழங்கும் படிப்பு இது. படித்து முடித்த உடன் வேலைவாய்ப்பு கிடைக்கும். இயந்திர, மின், மின்னணு, கணிப்பொறிகள் சார்ந்தவற்றை இயக்குதல், பழுதுபார்த்தல், மேலாண்மை செய்தல் பற்றி கற்றுத் தரப்படுகிறது. கப்பலில் நேரடிப் பயிற்சியும் உண்டு.

## BE Mecatronics **(இயந்திர மின்னணுவியல்)**

இயந்திரவியல், மின்னியல், மின்னணுவியல், கணிப் பொறியியல் ஆகியவை இணைந்த பாடப்பிரிவாகும். அதிகமான வேலை வாய்ப்பைப் பெற்றுத் தரும் சிறப்புமிக்க படிப்பாகும்.

## BE Instrumentation Engineering
**(கருவிப் பொறியியல்)**

பல்வேறு விதமான தொழிற் கருவிகள் உருவாக்குதல், பராமரித்தல், பழுது பார்த்தல், வடிவமைத்தல் போன்றவற்றை உள்ளடக்கிய படிப்பாகும். இன்றைய தொழில் வளர்ச்சியில் மனிதனுக்குப் பல்வேறு கருவிகள் தேவைப்படுவதால் இதுவும் முக்கியத்துவம் வாய்ந்த படிப்பே.

## BE Mining Engineering **(சுரங்கப் பொறியியல்)**

சுரங்கங்கள் அமைத்தல், சுரங்க இயந்திரங்கள், பாதுகாப்பு, மேலாண்மை, வடிவமைத்தல் போன்றவற்றை மையப்படுத்திய படிப்பாகும். கணிப் பொறியியல் பயன்பாடும் கற்றுத் தரப்படுகிறது. ஒரு சில கல்லூரிகளில் மட்டுமே இப்படிப்பு உள்ளதால் படிப்பு முடிந்தவுடன் உடனடி வேலைவாய்ப்பு பெறும் வாய்ப்பு உள்ளது.

## BE Instrumentation and Control Engineering

பொறியியல் துறையில் மிக வேகமாக வளரும் துறைகளில் இதுவும் ஒன்றாகும். இயந்திரங்களின் இயக்கம், கட்டுப்பாடு பற்றி கற்றுத் தரப்படுகிறது.

## BE Aeronautical Engineering
**(வானூர்தி பொறியியல்)**

மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருப்பது வானூர்தி பற்றிய படிப்பாகும். வானூர்தி தொழில் நுட்பம், இயக்கம், கட்டமைப்பு, வடிவமைத்தல், கட்டுப்பாட்டுக் கருவிகள், பரிசோதனை முறைகள் போன்றவை சம்பந்தப்பட்ட படிப்பாகும். வான் போக்குவரத்து அதிகரித்து வரும் இன்றைய சூழலில் நல்ல வேலைவாய்ப்பைத் தரும் பாடப் பிரிவாகும்.

## BE Automobile Engineering
**(தானியங்கிப் பொறியியல்)**

இது வாகனங்களைப் பற்றிய படிப்பாகும். வாகனங்கள் இயங்கும் விதம், இயந்திர பாகங்கள், வாகன அமைப்பு, வடிவமைத்தல், பராமரித்தல், வாகன உற்பத்தி மேலாண்மை ஆகியவற்றை உள்ளடக்கிய படிப்பாகும். அதிகமாக வேலை வாய்ப்புகளை பெற்றுத் தரும் பொறியியல் படிப்புகளில் இதுவும் ஒன்றாகும்.

## BE Chemical Engineering (வேதிப்பொறியியல்)

வேதிப் பொருட்கள் உற்பத்தி பற்றிய படிப்பு இது. பெட்ரோலியம், சர்க்கரை, உரம், மருந்துப் பொருட்கள், சாயங்கள், பீங்கான் பொருட்கள் தயாரிப்புகள் – அதற்கான வடிவமைப்புகள், நிர்மானம், செயலாக்கம், நிர்வாகம் பற்றி கற்றுத் தரப்படுகிறது.

## BE Bio Medical Engineering
**(பயோ மெடிக்கல் பொறியியல்)**

உயிரி தொழில் நுட்பத்திற்குத் தேவையான கருவிகள், மருத்துவ உபகரணங்கள், அதிநவீன மருத்துவக் கருவிகள், அதன் தொழில் நுட்பம் சம்பந்தப்பட்ட படிப்பாகும்.

## BE Bio Medical Instrumentation Engineering

உயிரி தொழில் நுட்பத்திற்குத் தேவையான கருவிகள், மருத்துவ உபகரங்கள், அதிநவீன மருத்துவக் கருவிகள், அதன் தொழில் நுட்பம் சம்பந்தப்பட்ட படிப்பாகும்.

## BE Printing Technology (அச்சுப் பொறியியல்)

அச்சுத் தொழில் அதி நவீன வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. அச்சுத் துறை சம்பந்தமான படிப்பு இது. அச்சுப் பொறிகள், அச்சிடும் முறைகள், நிர்வாக மேலாண்மை, கணினிப் பயன்பாடு போன்றவைப் பற்றி கற்றுத் தரப்படுகிறது.

## B. Tech. Bio Technology (உயிரித் தொழில்நுட்பம்)

எதிர்காலத்தில் உலகையே ஆளப்போகும் துறையான உயிரித் தொழில்நுட்பம் பற்றிய படிப்பு. உயிரியல், இயற்பியல், வேதியியல், மருத்துவம், விவசாயம், மருந்து உற்பத்தி என பல துறைகளின் சங்கமம் இது. அறிவியலையும் அது சார்ந்த தொழில் நுட்பவியலையும் ஒருங்கிணைத்து மனித குல வளர்ச்சிக்கு உதவுவது இத்துறையே. நல்ல வேலை வாய்ப்பு, நிறைவான சம்பளத்தைப் பெற்றுத் தரும்.

## B. Tech. Agricultural Engineering

இது வேளாண்மை உற்பத்திக் கருவிகளின் தொழில் நுட்பம், உற்பத்தி, வடிவமைப்பு, பயன்பாடு, பராமரிப்பு போன்றவற்றைப் பற்றிய படிப்பாகும். பெரும்பாலும் வேளாண்மைக் கல்லூரிகளில் கற்றுத் தரப்படுகிறது.

## B.Tech. Textile Technology
**(நெசவுத் தொழில் நுட்பம்)**

நம் நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடி முக்கியத்துவம் வாய்ந்த அதிக மக்கள் ஈடுபட்டிருக்கும் தொழில் நெசவு. அறிவியல் பூர்வமாக நெசவுத் தொழிலை மேற்கொள்ள நெசவு தொழில்நுட்பம் கற்றுத் தருகிறது. நூல் தயாரிப்பு, ஆடை தயாரிப்பு, ஆடை உருவாக்கம், சாயம் போடுதல், பட்டு மற்றும் நைலான் தயாரித்தல் முதலிய தொழில் நுட்பங்கள் கற்றுத் தரப்படுகின்றன.

## B. Arch. Architecture (கட்டடக் கலை)

இப்படிப்பு மிகவும் பாரம்பரியமானது. நவீன அறிவியல் தொழில் நுட்பங்களுடன் கட்டடக்கலை கற்றுத் தரப்படுகிறது. கட்டங்களை நவீனமாக அமைத்தல், அதிகபட்ச உபயோகத்திற்கு பயன்படுத்துதல், மேலும் கட்டடம் சார்ந்த நுண்கலைகளும் பொறியியல் தொழில்நுட்பத்துடன் கற்றுத் தரப்படுகின்றன.

## B. Tech Fashion Technology

Fashion Technology சார்ந்த அனைத்து தொழில் நுட்பங்களை உள்ளடக்கிய பாடப்பிரிவாகும். Fashion Designing, Modelling மற்றும் நவீன Fashion கருவிகள், அவற்றைக் கையாளல் போன்றவை பயிற்றுவிக்கப்படுகின்றன.

## B. Tech. Geo Infermatics (புவித் தகவலியல்)

மாணவர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கும் புதிய துறை இது. பூமியைப் பற்றிய பல்வேறு தகவல்கள், நில அளவைகள், புவி ஆய்வு போன்றவற்றை உள்ளடக்கிய உடனடி வேலை வாய்ப்பைப் பெற்றுத் தரும் படிப்பாகும். நில அளவை, ஒளிப்படல நில அளவை, கணிப்பொறி வழி வரைவியல், தொலையுணர்வியல், செயற்கைக் கோள் வழி அளவியல் போன்றவை கற்றுத் தரப்படுகின்றன.

## B. Tech. Leather Technology
**(தோல் தொழில் நுட்பம்)**

தோல் உற்பத்தி, பதனிடுதல். தோல் மூலம் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்தல். வடிவமைத்தல், தரம் பிரித்தல், காலணிகள், ஆடைகள் உருவாக்குதல் போன்றவற்றை உள்ளடக்கிய படிப்பாகும். இதுவும் எளிதில் வேலையைப் பெற்றுத் தரும் படிப்பே.

## B. Tech. Petrol Chemical Technology
**(பெட்ரோலியம் பற்றிய தொழில் நுட்பம்)**

கச்சா எண்ணெய் எடுத்தல், சுத்திகரித்தல், பெட்ரோலிய பொருட்களைப் பிரித்தெடுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய படிப்பாகும். வெளிநாடுகளில் இப்படிப்பிற்கு முக்கியத்துவம் அதிகம். வளைகுடா நாடுகளில் உடனடி வேலையும் கிடைக்கிறது.

## B. Tech. Rubber Technology

ரப்பர், ரப்பர் சார்ந்த பொருட்கள், ரப்பர் மூலம் தயாரிக்கப்படும் இயந்திர பாகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பொறியியல் படிப்பாகும். இதுவும் சிறந்த பொறியியல் படிப்பாகவே கருதப்படுகிறது.

## B. Tech. Nano Technology

மிக நுட்பமான முறையில் இயந்திர பாகங்கள், மின்னியல் மற்றும் மின்னணு பாகங்கள் தயாரித்தல், வடிவமைத்தல், மருத்துவக் கருவிகள் வடிவமைத்தல் போன்றவற்றை மையப்படுத்திய படிப்பாகும். அதிகமான வரவேற்பையும் உடனடி வேலைவாய்ப்பையும் பெற்றுத் தரும் படிப்பாகும்.



# சில சிறப்பு பாடப்பிரிவுகள்

## கட்டிட வடிவமைப்பு (Architecture)

தாஜ்மகாலின் அழகில் மயங்கி நிற்கிறோம். பாபிலோனியா தொங்கும் தோட்டத்தைப் பார்த்து பரவசமடைகிறோம். எகிப்திய பிரமிடுகளைக் கண்டு பிரமிக்கிறோம். பாரீஸ் நகரின் ஈபிள் டவரை பார்த்து வியக்கிறோம். பைசா நகர சாய்ந்த கோபும் நம்மை ஆச்சரியப்படுத்துகிறது. இதற்குக் காரணம் ஒவ்வொன்றும் கலை நுட்பத்தோடு அமைக்கப்பட்டிருப்பதுதான்.

இத்தகைய கட்டிடங்கள் உருவாகக் காரணம் கட்டடக்கலை தொழில்நுட்பத் திறன்தான். ஆர்க்கிடெக்சர் என்று அழைக்கப்படும் கட்டடக்கலை வடிவமைப்புப் படிப்பு, படைப்பாற்றல் திறனுடன் திட்டமிடுதல் திறனும் உடைய மாணவர்களுக்கு ஏற்ற படிப்பு ஆகும். இதற்காக பி.ஆர்க். என்கிற ஐந்து ஆண்டு இளநிலைப் பட்டப் படிப்பு உள்ளது.

### ஆர்க்கிடெக்சர் பட்டப் படிப்பில் சேருவது எப்படி?

+2வில்க ணிதம்,இ யற்பியல்,வே தியியல்ப ாடப்பி ரிவுகளை எடுத்துப் படித்த மாணவர்கள் பி.ஆர்க். படிப்பில் சேரலாம். தமிழகத்தைப் பொறுத்தவரை நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டு விட்டாலும்கூட, பி.ஆர்க். படிப்பில் சேருவதற்கு கவுன்சில் ஃபார் ஆர்க்கிடெக்சர் (Council of Architecture) அமைப்பு நடத்தும் தேசிய அளவிலான திறனறிவுத் தேர்வு (National Aptitude Test in Architecture -NATA) எழுத வேண்டும்.

NATA நுழைவுத் தேர்வில் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஒரு பிரிவில், சரியான விடைகளைத் தேர்ந்தெடுக்கும் அப்ஜக்டிவ் டைப் முறையில் வினாக்கள் இருக்கும். இதில், பொது அறிவு வினாக்களோடு கட்டடக் கலையின் வரலாறு சார்ந்த விஷயங்களும் கேட்கப்படும். இரண்டாவது பிரிவு மாணவரின் படம் வரையும் திறனையும், கற்பனைத் திறனையும் சோதனைச் செய்யும் வகையில் இருக்கும் டிராயிங் தேர்வு ஆகும்.

இந்தத் தேர்வில் மாணவர்கள் வரையும் படங்கள், உடனே ஸ்கேன் செய்யப்பட்டு, தேர்வு நடத்துபவர்களுக்கு அனுப்பப்படும். அந்தப் படம் புலமை பெற்ற மூன்று பேரிடம் கொடுத்து மதிப்பிடப்படும். நுழைவுத் தேர்வு எழுதி மூன்று முதல் நான்கு நாட்களுக்குள் முடிவு தெரிந்துவிடும். இந்த நுழைவுத் தேர்வில், முதல் முறை குறைவான மதிப்பெண் பெற்றிருந்தால் கவலைப்படத் தேவையில்லை. எவ்வளவு முறை வேண்டுமானாலும் இத்தேர்வை தொடர்ந்து எழுதலாம். ஆனால் கடந்த முறை பெற்ற மதிப்பெண்களோடு புதியதாக பெறும் மதிப்பெண்களின் சராசரியும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். நுழைவுத் தேர்வில் குறைந்தது நாற்பது சதவீதம், அதாவது 200க்கு 80 மதிப்பெண்ணுக்கு மேல் பெற்றால்தான் தரவரிசைப் பட்டியலில் இடம் பிடிக்க முடியும். தமிழ்நாட்டில் அண்ணா பல்கலைக் கழகத்தில் மாணவர் சேர்க்கைக்கு +2 தேர்வில் கணிதம், இயற்பியல், வேதியியல் பாடப்பிரிவுகளில் பெற்ற மதிப்பெண்களுடன் நேட்டா நுழைவுத் தேர்வு மதிப்பெண்களையும் சேர்த்து ரேங்க் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

### வேலைவாய்ப்பு எப்படி?

வேலைவாய்ப்புக்குப் பஞ்சமில்லை. ஒவ்வொரு ஆண்டும் கட்டுமானத் துறையில் முதலீடு அதிகரித்த வண்ணம் இருக்கிறது. இதனால் பெருமளவில் ஆர்க்கிடெக்டுகளுக்கு டிமாண்ட் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கில் கட்டுமானத் திட்டங்களும் வந்த வண்ணம் இருக்கின்றன. அதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கத் தேவையான ஆட்கள் இல்லாமல் இருக்கிறார்கள். ஆர்க்கிடெக்சர் பட்டப் படிப்பை முடித்து விட்டு அத்துறை சார்ந்த நிறுவனங்களில் வேலைக்குச் சேர்ந்தால், ஆரம்பத்தில் 20,000 ரூபாய் வரை சம்பளம் கொடுப்பார்கள். படிப்படியாகத் திறமையைப் பொறுத்து ஊதியம் பல மடங்கு உயரும் வாய்ப்புகளும் உள்ளன.


வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள், தெருக்கள், அலுவலக மற்றும் தொழில்துறைக் கட்டடங்கள், விற்பனை மையங்கள், மருத்துவமனைகள், உணவகங்கள், விமான நிலையங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் போன்றவை கட்டடக் கலைக்கும், வடிவமைப்புக்கும் முக்கியத்துவம் தர ஆரம்பித்திருக்கின்றன. இன்னும் சிலர், ஏற்கனவே உள்ள கட்டடத்தை மாற்றி அமைக்கவும், புதுமைப்படுத்தவும் செய்கிறார்கள். இதனால், கட்டடக் கலைஞர்களுக்கு எப்போதும் பணிகள் இருந்த வண்ணம் இருக்கின்றன. கூடவே, கட்டுமானத் துறையின் வேகமான வளர்ச்சியால் கட்டடக் கலையும், அதன் வடிவமைப்பும் வளர்ச்சி பெற ஆரம்பித்திருக்கின்றன.

மேலும், நாட்டின் உள்கட்டமைப்புப் பணிகளுக்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அத்தகைய உள்கட்டமைப்புப் பணிகளிலும் கட்டுமானக் கலைஞர்களின் பங்களிப்பு அதிகரித்து வருகிறது. நகரத்தில் மக்கள் தொகை அதிகமாகி வீடு கட்ட இடமில்லை என்கிறபோது, கட்டடக் கலைஞர்களின் பங்களிப்பு தேவைப்படுகிறது.

அரசுத் துறையிலும் வேலை வாய்ப்பு ஏராளம். பொதுப்பணித் துறை, ஆர்க்கியாலஜித் துறை, பாதுகாப்புத் துறை, ரயில்வே துறை, தபால் மற்றும் தந்தித் துறை, பொதுத்துறை நிறுவனங்கள், தேசிணுக் கட்டுமான கட்டட நிறுவனம் என பல அரசு நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெறலாம்.

வேலைக்குச் செல்பவர்கள் படித்து முடித்ததும், நேரடியாக வேலையில் சேர்ந்து விடலாம். இன்னும் கொஞ்சம் தங்களை மேம்படுத்தி, தனிப்பிரிவுகளில் சிறப்பு வேண்டும் என நினைப்பவர்கள் உயர் கல்வி படிக்கலாம். முதுநிலைப் படிப்புகளில் சேருவதற்கும் கேட் தேர்வில் தேர்ச்சி பெற்றால், கல்வி உதவித் தொகையோடு படிக்கலாம்.

நகர வடிவமைப்பு, மண்டலத் திட்டமிடல், கட்டடப் பொறியியல் மற்றும் மேலாண்மை, கட்டடப் பாதுகாப்பு, தொழில்துறை வடிவமைப்பு, லேண்ட்ஸ்கேப் வடிவமைப்பு (Landscape Architechture), நேவல் ஆர்க்கிடெக்சர் (Naval Architechture), டிராபிக் மற்றும் டிரான்ஸ்போர்ட் திட்டமிடல் போன்று பல பிரிவுகளில் முதுநிலைப் பட்டப் படிப்பைப் படிக்கலாம். இந்த படிப்புகளை இந்தியாவில் படிக்கலாம். அல்லது வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் படிக்கலாம். முதுநிலைப் பட்டம் மற்றும் ஆய்வுப் படிப்பை படித்து முடித்த மாணவர்கள் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் வேலைக்குச் சேரலாம்.





வீட்டுக் கொடுங்கள், விருப்பங்கள் நிறைவேறும்...! மன்னிப்புக் கொடுங்கள், தவறுகள் குறையும்...!
மனம்விட்டு பேசுங்கள், அன்பு அதிகமாகும்!

# மாமனிதன்

# மண்டேலா



தலைவர்களை அறிந்து கொள்வோம்

பூமியில் உள்ள எந்த உயிரினத்துக்கும் இல்லாத பகுத்தறிவு மனிதனுக்கு வாய்த்ததன் விளைவு பல நன்மை, தீமைகளுக்கு நம்மை இட்டுச் சென்றது. அறிவியல் ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் மனித இனமே எதிர்பார்த்திராத அளவுக்கு குறுகிய காலத்தில் ஒரு பிரமாண்டமான வளர்ச்சியை கண்டுவிட்டோம். இனி காணவும் போகிறோம். அதே நேரத்தில் வேறு எந்த உயிரினத்திலும் இல்லாத இன, நிற, மொழி, மத, சாதி, வர்க்க வெறியால், நாம் விலங்குகளைக் காட்டிலும் கீழான நிலையில் தள்ளப்பட்டிருக்கிறோம்.

ஒரு யானை எந்த யானையையும் அடிமைப்படுத்தவில்லை. ஒரு குரங்கு எந்தக் குரங்கையும் வேறுபடுத்தி பார்ப்பதில்லை. ஒரு சிங்கம் எந்த சிங்கத்தையும் தலைவணங்கச் சொன்னதில்லை. பூமியில் வேறு எந்த உயிரினமும்... அவற்றுள் வேற்றுமை பார்ப்பதில்லை.

## மனிதன் மட்டும் ஏன்?

இந்தக் கேள்வி ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் எழும்போது நாம் பகுத்தறிவைக் கொண்டு என்ன சாதித்துக் கொண்டிருக்கிறோம் என்பது நன்றாகத் தெரியும்.

தென் ஆப்பிரிக்காவில் நிலவிய நிறவெறியை நீர்த்துப் போகச் செய்த நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.

## இளமைக் காலத்தில் மண்டேலா

நெல்சன் மண்டேலா 1918ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் தேதி தென்னாப்பிரிக்காவில் உள்ள குலு கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தை சோசா பழங்குடி இன மக்கள் தலைவர். இவரின் தந்தைக்கு நான்கு மனைவிகள். 4 ஆண்களும் 9 பெண்களுமாக 13 பிள்ளைகள். மூன்றாவது மனைவிக்கு மகனாகப் பிறந்தவர்தான் மண்டேலா. இவரின் முழுப்பெயர் நெல்சன் ரோபிசலா மண்டேலா. நெல்சன் மண்டேலா என்றே பொதுவாக அழைப்பார்கள். இவரின் சிறுவயதில் குத்துச் சண்டை வீரராகவே அறியப்பட்டார்.

மண்டேலா இளம் வயதில் ஆடு, மாடு மேய்த்துக் கொண்டே பள்ளிக் கூடத்தில் படித்தார். போர் புரியும் கலைகளையும் பயின்றார். இவரின் பெயரின் முன்னால் உள்ள நெல்சன் இவர் கல்வி கற்ற முதல் பள்ளியின் ஆசிரியரால் சூட்டப்பட்டது. கல்வியறிவைப் பெறுவதில் பெரிதும் நாட்டம் கொண்ட மண்டேலா, லண்டன் மற்றும் தென்னாப்பிரிக்கா பல்கலைக் கழகங்களிலும் பட்டப்படிப்பை மேற்கொண்டார். 1941ஆம் ஆண்டு ஜோகானஸ்பேர்க் சென்று பகுதி நேரத்தில் சட்டக் கல்வி படித்தார். ஒரு தங்கச் சுரங்க பாதுகாப்பு அதிகாரியாகவும், தோட்ட முகவராகவும் பணியாற்றி வந்தார்.

அப்போது நோமதாம் சங்கர் என்ற செவிலியரைத் திருமணம் செய்து கொண்டார். மண்டேலா ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு இருந்ததால் மனைவிக்கும் இவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. பின்னர் தென்னாப் பிரிக்க அரசு, ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியைத் தடை செய்தது. மண்டேலா மீது வழக்கு தொடரப்பட்டது. ஐந்தாண்டுகளாக அந்த வழக்கு விசாரனை நடந்து கொண்டு இருந்தபோது 1958ஆம் ஆண்டு வின்னி மடிகி லேனா என்பவரை மணந்தார். வின்னி தனது கணவரின் கொள்கைகளுக்காகப் போராடி வந்தார். மண்டேலாவுக்கு முதல் மனைவி மூலம் 3 குழந்தைகளும் 2ஆவது மனைவி மூலம் 2 குழந்தைகளும் உள்ளனர்.

## மண்டேலாவின் போராட்டங்கள்

தென்னாப்பிரிக்க நாட்டில் கறுப்பு இனத்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். ஆனாலும் ஆட்சி அதிகாரம் வெள்ளையர்களிடமே இருந்தது. 1939ஆம் ஆண்டில் தனது 21ஆவது வயதில் கறுப்பின இளைஞர்களை ஒன்றிணைத்து, கறுப்பின மக்கள் அடக்கப்படுகின்றனர். அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுகின்றது. அவர்கள் பிரயாணம் செய்வதற்கு அவர்களுடைய நாட்டினுள்ளேயே அனுமதி பெற வேண்டியுள்ளது. நிலவுடைமையாளர்களாக கறுப்பின மக்கள் இருப்பது தடை செய்யப் பட்டுள்ளது. இவை சுதேச மக்களுக்கு எதிரானவை. நீதியற்றவை. இவற்றிற்கு எதிராக நாம் போராட வேண்டும் என அறைகூவி கறுப்பின மக்களை விழிப்படையச் செய்வதில் வெற்றி கண்டார். 1943ஆம் ஆண்டு ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸில் சேர்ந்தார். 1948ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவில் ஆட்சிப் பொறுப்பேற்ற அரசு, கறுப்பின மக்களுக்கெதிராக முறையற்ற நடவடிக்கைகளை எடுத்து, மண்டேலாவும் அவரின் பல்கலைக் கழகத் தோழனாகிய ஓலிவர் ரம்போவும் இணைந்து இன ஒதுக்கலுக்கு உள்ளாகிய கறுப்பின மக்களுக்காக சட்ட ஆலோசனைகளை வழங்கினர்.

இனவாதமும், ஒடுக்குமுறையும் அரசின் ஆதரவுடன் அரங்கேறுவதை அறிந்து கொண்ட மண்டேலா சீற்றம் கொண்டவராக அரசியலுக்குள்

நீ யாரையாவது ஏமாற்றிவிட்டால் அவர்கள் ஏமாந்துவிட்டதாக அர்த்தம் இல்லை...
உன்னை அளவுக்கு அதிகமாக நம்பி இருக்கிறார்கள் என்று அர்த்தம்...

குதித்தார். மெதுவாக, கருப்பு இன மக்களின் நலனைப் பாதுகாப்பதற்காக உருவான ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் என்ற கட்சியின் முதன்மை பொறுப்புக்கு வந்தார். அதன் தலைவரான நெல்சன் மண்டேலா, இனவெறி பிடித்த வெள்ளையர் ஆட்சியை எதிர்த்துப் போராடினார். இவரின் தலைமையில் அரசின் இனவாதக் கொள்கைகளுக்கு எதிராக அறப் போராட்டங்கள் முளையெடுக்க ஆரம்பித்தன. இவரது வன்முறையற்ற போராட்டம் வளர்ச்சியடைவதைக் கண்ட வெள்ளையர் அரசு 1956இல், அரசுக்கு எதிராகப் புரட்சி செய்தார் என கைது செய்தது.

ஆனால் நான்காண்டு விசாரணைக்குப் பிறகு குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டன. சிறையில் இருந்து வெளிவந்த மண்டேலா தீவிரமாக செயற்பட்டார். இதன் காரணமாக 1960களில் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் வேகமாக வளர்ச்சியடைந்தது. 1960இல் ஆப்பிரிக்கர்களுக்கு விசேஷ கடவுக்சீட்டு வழங்குவதற்கு எதிராக ஊர்வலம் ஒன்றை ஷார்ப்வில்லே நகரில் நடத்தினார். காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டால் 69பேர் கொல்லப்பட்டனர். 1956அம் ஆண்டு டிசம்பர் 5இல் தேசத்துரோகக் குற்றச் சாட்டுகளுக்காக மண்டேலாவும் அவரின் 150 தோழர்களும் கைது செய்யப்பட்டனர். நெடிய சட்டப் போராட்டத்திற்குப் பிறகு 1961இல் அனைவரும் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து அறப்போர் மூலம் போராடி உரிமைகளைப் பெற முடியாது என உணர்ந்த மண்டேலா ஆயுத வழிமுறையை நாடினார். இதனையடுத்து அவரைக் கைது செய்ய வெள்ளையாட்சியினர் முடிவு செய்தனர்.

1961ஆம் ஆண்டு ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸின் ஆயுதப்படைத் தலைவனாக மண்டேலா உருவெடுத்தார். வெளிநாட்டு நட்பு சக்திகளிடமிருந்து பணம் மற்றும் இராணுவ உதவிகளைப் பெற்று, அரசு மற்றும் இராணுவ கேந்திர நிலையங்கள் மீது கொரில்லா தாக்குதல்களை ஒருங்கிணைத்து நடத்தினார்.

1961 டிசம்பர் 16ஆம் நாள் இனவெறிக்கு எதிராக முதலாவது தாக்குதல் மண்டேலா தலைமையில் நடத்தப்பட்டது. அரசாங்கம் கடுமையாக கெடுபிடி செய்ததால் 1961ஆம் ஆண்டில் மண்டேலா தலைமறைவானார். அவரைப் பிடிக்க வாரண்டு பிறப்பிக்கப்பட்டது. இனவெறிக்கு எதிரான இவரது போர் நடவடிக்கைகள் மனித உரிமைகளை மீறுவதாகக் குற்றம் சாட்டப்பட்டது. இதனைக் காரணம் காட்டி அமெரிக்காவும் இவர் மீது பயங்கரவாத முத்திரை குத்தியது. மண்டேலா அமெரிக்காவுக்குள்



நுழைவதற்கான தடை ஜுலை 2008 வரை நடைமுறையில் இருந்தது.

1962 ஆகஸ்ட் 05ஆம் நாள் இவர் தங்கியிருந்த பகுதிக்குள் மாறு வேடமணிந்து புகுந்த காவல்துறையினரால் சுற்றி வளைக்கப்பட்டு கைதாகினார். திட்டமிட்டபடி மண்டேலா உட்பட 10 முக்கிய ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்களைக் கைதுசெய்து சிறையில் அடைத்தது வெள்ளை அரசு. அரசுக்கு எதிராகப் புரட்சி செய்தது, அமைதியைக் குலைத்ததாகவும், கலகத்தை உருவாக்கியதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.இவ்வழக்கு 1963இல் ரிவோனியா செயற்பாடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தென்னாப்பிரிக்க அரசைக் கவிழ்க்க முயன்றதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. மண்டேலாவுக்கு 1964ஆம் ஆண்டு ஜுன் 12இல் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது அவருக்கு 46 வயது. அன்று ஆரம்பித்த அவரின் சிறைவாசம் 27 ஆண்டுகளாகத் தொடர்ந்தது.

## சிறை வாழ்க்கை

மண்டேலா 1962இல் சிறையில் அடைக்கப்பட்டார். ஏறத்தாழ 27 ஆண்டுகள் சிறையில் இருந்தார். உலக வரலாற்றிலேயே மண்டேலாவைப் போல இவ்வளவு நீண்ட காலம் சிறையில் வாடிய தலைவர்கள் கிடையாது.

பல ஆண்டுகள் அவரைத் தனிமைச் சிறையில் அடைத்து கொடுமை செய்தது தென்னாப்பிரிக்க அரசாங்கம். மனைவியைச் சந்திப்பதற்குக்கூட அனுமதி மறுக்கப்பட்டது. 1988ஆம் ஆண்டு கடுமையான காசநோய் ஏற்பட்டு மரணத்தின் எல்லைக்கே சென்றார். அதனால் வீட்டுச் சிறைக்கு மாற்றப்பட்டார்.

மண்டேலாவை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை உலகம் முழுவதும் எழுந்தது. ஆனால் தென்னாப்பிரிக்க நிறவெறி ஆட்சியின் தலைவராக இருந்த போந்தா, மண்டேலாவை விடுதலை செய்ய மறுத்து வந்தார். மண்டேலாவை விடுதலை செய்யும்படி வற்புறுத்தி மண்டேலாவின் மனைவி தலைமையில் ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் தொடர்ந்து நடந்து வந்தன.

மன்னிப்பு கேட்டால் விடுதலை செய்கிறோம் என்று தென்னாப்பிரிக்க அரசு ஆசை காட்டியது. ஆனால் மண்டேலா மன்னிப்பு கேட்க மறுத்துவிட்டார். தென்னாப்பிரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய அதிபராக டெக்ளார்க் பதவிக்கு வந்தார். அவர் மண்டேலாவை விடுதலை செய்ய முன்வந்தார். இதனால் மண்டேலாவின் விடுதலை நாளை உலகமே ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தது.

மண்டேலா தனது கோரிக்கைகள் தொடர்பாக டெக்ளார்க் அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு, அவர்களிடம் இருந்து தனது பல கோரிக்கைகளைப் பெற்றுக் கொண்டார். தென்னாப்பிரிக்கா ஒரு மக்களாட்சி நாடாகப் பின்னர் மலர்வதற்கு இந்தப் பேச்சுவார்த்தைகள் முக்கிய பங்கு வகித்தன.



நீங்கள் சூரியனைப் போலப் பிரகாசிக்க வேண்டுமானால், முதலில் சூரியனைப் போல எரிய வேண்டும்
– டாக்டர். அப்துல் கலாம்




அப்போதைய தென்னாப்பிரிக்கா அரசு தலைவரான பிரெட்ரிக் வில்லியம் டெக்ளார்க் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் மீதான தடையை நீக்கி, மண்டேலா 11.02.1990 அன்று விடுதலை செய்யப்படுவார் என்று அதிகாரப் பூர்வமாக அறிவித்தார். 1990இல் மண்டேலா சிறையிலிருந்து விடுதலை பெற்றார். விடுதலை பெற்றபோது அவருக்கு வயது 71. இந்நிகழ்வு உலகம் முழுவதும் நேரடியாக தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டது.

தென்னாப்பிரிக்கா அரசு அறிவித்தபடியே 11.02.1990 அன்று மாலையில் மண்டேலா விடுதலை செய்யப்பட்டார். மண்டேலாவை வரவேற்க உலகம் முழுவதும் ஏற்பாடுகள் நடந்தன. இந்தியா சார்பாக பிரதமர் வி.பி.சிங் தலைமையில் வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது. மண்டேலாவுடன் அவர் மனைவி வின்னி கை கோர்த்தபடி சிறையில் இருந்து வெளியே வந்தார். சிறைச்சாலையின் வாசலில் ஆப்பிரிக்க நாட்டுத் தலைவர்கள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் அவரை உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் வரவேற்றனர்.

பின்னர் மண்டேலாவை காவலர் பாதுகாப்பாக கேப்டவுன் நகருக்கு அழைத்துச் சென்றனர். சிறைச்சாலையின் வாசலில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொலைக்காட்சி மற்றும் புகைப்பட நிபுணர்கள் அவரை படம் எடுத்தனர். மண்டேலா விடுதலையான நிகழ்ச்சி தென்னாப்பிரிக்கா முழுவதும் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. மண்டேலா விடுதலை செய்யப்பட்டதை உலகத் தலைவர்கள் பலர் வரவேற்றார்கள். கேப்டவுன் நகருக்கு திரும்பிய மண்டேலா அங்கு ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியினர் மத்தியில் பேசினார்.

அவர் கூறியதாவது: இனவெறி ஆட்சியைத் தனிமைப்படுத்த சர்வதேச சமுதாயம் தொடர்ந்து பிரச்சாரம் செய்ய வேண்டும். என்னுடைய விடுதலை மட்டுமே பேச்சுவார்த்தைக்குத் தேவையான அடித்தளம் ஆகாது. நிற வேறுபாடு இல்லாமல் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புதான் நம் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வேண்டும். அரசியல் அதிகாரத்தின் மீது வெள்ளையர்களின் ஏகாதிபத்தியத்துக்கு முடிவு காண வேண்டும். கறுப்பின மக்களுக்கு சம உரிமை கிடைக்க வேண்டும். அதுவரை போராடுவோம்.

## அதிபர் பதவி

1994 மே 10ஆம் தேதி அவர் தென்னாப்பிரிக்காவின் அதிபர் ஆனார். அவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது நிறவெறியை அடியோடு ஒழிக்க பல்வேறு சீர்திருத்தங்கள் செய்தார். நோபல் பரிசு பெற்ற நெல்சன் மண்டேலா தென்னாப்பிரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு பதவி வகித்ததின் பின் பதவியை விட்டு விலகினார். இவர் 2வது முறை அதிபர் பதவிக்கு போட்டியிட மறுத்துவிட்டார்.

நீண்ட போராட்டத்திற்குப் பின், அடக்குமுறையார்களுக்கும், அடக்கப்பட்டவர்களுக்கும் இடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் பல்வேறு செயல்பாடுகளில் மண்டேலா ஈடுபட்டார். அவற்றில் முக்கியமானது உண்மையும் நல்லிணக்கத்துக்குமான ஆணைம் அமைத்து பழிவாங்கலைத் தவிர்த்து உண்மையையும் நியாயத்தையும் பெறுவதற்கான ஒரு முறையை அதனூடாக ஏற்படுத்தியது ஆகும்.

## மண்டேலாவின் மறைவு

உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் 2013 ஜுன் மாதம் 8ஆம் தேதி மண்டேலா பிரிட்டோரியாவில் உள்ள மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டார். அவரது உடல் நலம் கவலைக்கிடமாக உள்ளது என தென்னாப்பிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சுமாவின் அலுவலகம் 2013 ஜுன் 23ஆம் தேதி அறிவித்தது.

மண்டேலாவின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருந்ததால், 2013 ஜுன் 27ஆம் தேதி ஜனாதிபதி ஜேக்கப் சுமா தனது மொசாம்பிக் பயணத்தை ரத்து செய்தார். நெல்சன் மண்டேலாவின் நெருங்கிய உறவினர்கள் அனைவரும் பூர்வீக வீட்டிற்கு அவசரமாக வரவழைக்கப்பட்டனர். அவர்கள் மண்டேலா நலமடைந்து வீடு திரும்ப பிரார்த்தனை நடத்தி வந்தனர்.

5 டிசம்பர் 2013 அன்று தனது 95ஆவது வயதில் நிறவெறிக்கு எதிராகப் போராடி, நிற வேற்றுமையை மறையச் செய்த மாவீரன் நெல்சன் மண்டேலா மறைந்தார். அவரது இறுதிச் சடங்கு 2013 டிசம்பர் 15ஆம் தேதி நடந்தது. அவரது இறுதிச் சடங்கில் பல நாட்டுத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

நெல்சன் மண்டேலாவின் மறைவு உலக மக்களுக்கு ஒரு பெரும் இழப்பு. அவரது பிறந்த நாளில் அவரை நினைவு கூர்வது நமது அனைவரின் கடமை.

நன்றி: **Seithy.com**

**கனவு இதழுக்கான**
**நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன**

கனவு இதழுக்கான உங்கள் நன்கொடையினை காசோலையாகவோ / DDஆகவோ / வங்கி பணபறிமாற்றமாகவோ வழங்கலாம்.

| | | |
|---|---|---|
| A/c. Name | : | Visions Global Empowerment India |
| A/c. No. | : | 739601010050037 |
| A/c.Type | : | Current Account |
| Bank | : | Union Bank of India |
| Branch | : | K K Nagar Branch, Trichy |
| MICR Code | : | 620026008 |
| IFSC Code | : | UBIN0573965 |
| Bank Phone | : | +91 431 2458485 |



# சோம்பலை விரட்டிடு



## பழமொழிகள் கற்றுத்தரும் பாடங்கள்

**பழமொழிகள் வாழ்க்கையை செம்மைப்படுத்தி, உறுதிப்படுத்தும் அனுபவ மொழிகள். ஒவ்வொரு பழமொழியும் ஒரு களஞ்சியம். அவைகள் நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச்சென்ற அனுபவ பாடங்கள்!**

வாழ்க்கையோடு ஒன்றாகியிருந்த பழமொழிகள் இன்று மேடைப் பேச்சுகளின் போது சொல் நயத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படுகின்றன. வயது முதிர்ந்தவர்கள் கிராமங்களில் வாழ்வியல் பிரச்சனைகளை அலசும்போது பழமொழிகளை பயன்படுத்துவர். சிக்கலான பிரச்சனைகளுக்கு பழமொழிகளின் மூலம் மிகவும் எளிதாக விடைத்தேடிட பழமொழிகள் உதவுகின்றன.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்கின்ற பழமொழி கிராமங்களில் மிக அதிக அளவில் பயன்பாட்டில் உள்ளது. இன்றைய இளைஞர்களக்கு பானை சோறு தெரிந்திருப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. குக்கரில் சமைப்பதால் சோறு பதம் பார்ப்பதும் இல்லை.

தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்ப சூழலிலும், நாட்டு நடப்புகளிலும் மறைந்து கிடக்கும் நிஜங்களை அப்பட்டமாக வெளிச்சம் போட்டுக் காட்டவும், தனிமனித வாழ்விலும், குடும்ப வாழ்விலும் இப்பழமொழி பெரிதும் உதவுகின்றது.

உதாரணத்திற்கு, அலுவலர் ஒருவர் குற்றம் ஒன்றை மறைத்திட இலஞ்சம் பெறுகின்றார். அவரின் அந்த செயல் அவர் சார்ந்திருக்கும் துறையில் புரையோடிக் கிடக்கும் அவலங்களுக்கான ஒரு அடையாளம். இந்த உண்மையை தோலுரித்துக் காட்டுகின்றது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்– என்கின்ற பழமொழி.

இதுபோல ஆயிரம் பழமொழிகள் தமிழில் கொட்டிக் கிடக்கின்றன. இளையோர் வாழ்க்கையை நெறிப்படுத்தி மேன்மைப்படுத்தும் வல்லமை வாய்ந்த தமிழ் பழமொழிகளை உதாரணங்களோடு உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் கனவு இதழ் பெருமை கொள்கின்றது.

**எறும்பு ஊரக் கல் தேயும்**

**அடிக்க அடிக்க அம்மியும் நகரும்**

இந்த இரண்டு பழமொழிகளில் புதைந்து கிடக்கின்ற வாழ்க்கைத் தத்துவத்தை இப்போது பார்ப்போம்.

இளையோரின் வளர்ச்சியில் முக்கியத் தடைகள் **சோம்பல்** மற்றும் **தள்ளிப் போடுதல்.** இவைகள் இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவைகள். இளையோர்கள் மிக எளிதாக சோம்பிப்போகின்றனர். அதன் விளைவாக செய்ய வேண்டிய வேலைகளைத் தள்ளிப் போடுகின்றன.

சோம்பலுக்கான காரணங்கள் பல. அவைகளில் சிலவற்றை ஆராய்வோம்.



### 1. தோற்றுப்போவோம் என்கின்ற பயம்

பள்ளிக் கூடங்கள் இளையோரை உற்சாகப்படுத்தி நேர்மறை எண்ணங்களை விதைத்து தட்டிக் கொடுக்க வேண்டும். ஆனால், வியாபாரக் கூட்டங்களாகிப் போன கல்வி நிலையங்கள், தேர்ச்சி நிலையை மட்டுமே கருத்தில் கொண்டு இளையோரை மிரட்டுகின்றன. எதிர்பார்க்கின்ற மதிப்பெண்கள் பெறாத மாணவர்களை உடல் ரீதியாக, மன ரீதியாக காயப்படுத்துகின்றன. அவர்களின் பெற்றோர்கள் முன்னிலையில் அசிங்கப்படுத்தப்படுகின்றன.

உன் மனம் வலிக்கும்போது சிரி, பிறர் மனம் வலிக்கும்போது சிரிக்க வை
– சார்லி சாப்ளின்

மனமுடைந்து போகின்ற இளையோர் தோற்றுப்போவோம், நடப்பது நடக்கட்டும், கஷ்டப்பட்டு படித்தாலும் இதே வசைபாடுதல் தானே என்கின்ற எண்ணங்களை தங்களுக்குள் உருவாக்கிக் கொள்கின்றனர்.

தோல்வி பயம், எதிர்மறை எண்ணங்கள் சோம்பலை உருவாக்குகின்றன.



## 2. வெற்றி பயம்...

சமீபத்தில் வட இந்திய மாநிலமொன்றில் அதிக மதிப்பெண் பெற்றதற்காக மாணவன் ஒருவனை சக மாணவர்கள் சேர்ந்து தாக்கிய வீடியோ சமூக வலைதளங்களில் காணக் கிடந்தது. அந்த மாணவனை தாக்கியவர்கள் அவனை சொல்லச் சொன்னது, நான் இனி நல்ல மதிப்பெண் வாங்க மாட்டேன்.

நிறைய மார்க் வாங்கினால் எனக்குப் பிடிக்காத கல்லூரியில் சேர்த்து விடுவார்களோ அல்லது எனக்கு பிடிக்காத மேல்படிப்பை படிக்கச் சொல்வார்களோ என்கின்ற பயம் சோம்பலை வளர்க்க உதவுகின்றது.

ஆகவே வெற்றி பயம்கூட சோம்பலுக்கு காரணமாக அமையலாம்.

## 3. கவன ஈர்ப்புக்காக...




தான் மதிக்கப்பட வேண்டும். தன்னை, தன்னுடைய செயல்பாடுகளை பிறர் அங்கீகரிக்க வேண்டும் என்று இளையோர்கள் ஒவ்வொருவரும் விரும்புகின்றனர்.

அதிக நேரம் தூங்கிவிட்டு – குடும்ப நிகழ்வுகளுக்காக தாமதமாகப் போவதுகூட ஒருவித கவன ஈர்ப்பு. மிகவும் குறைந்த மதிப்பெண்கள் பெறுவதும் ஒருவித கவன ஈர்ப்பு. இளையோர்கள் தன்னையறியாமலேயே கவன ஈர்ப்புக்காக சோம்பலை வளர்த்துக் கொள்கின்றனர்.



## 4. எதிர்ப்புகளைத் தவிர்த்திட...

தான் ஒரு சோம்பேறி என்று நிரூபித்து விட்டால் பிறர் தங்கள்மேல் தேவையற்ற எதிர்பார்ப்புகள் கொள்ளமாட்டார்கள் என்கின்ற காரணத்தினால் வேண்டுமென்றே சோம்பல் படும் இளையோர் உண்டு.

தான் திறமையானவன் என்று நிரூபித்துவிட்டால், பிறர் எப்போதும் தன்னை வேலை வாங்குவார்கள். தனக்கென நேரமும், தன் விருப்பம் போல் செயல்பட முடியாமலும் போகலாம் எனக் கருதி தங்களை சோம்பல் பேர்வழிகளாக மாற்றிக்கொள்பவர்கள் பலர்.

## 5. சோம்பலால் பாடம் புகட்ட...

பெற்றோரை தண்டிக்க முடியாது, ஆசிரியர்களை கேள்வி கேட்க முடியாது. தன்னைவிட பெரியவர்களிடம் வாதிட முடியாது – இச்சூழலில் அவர்களுக்கு பாடம் புகட்டிட ஒரே வழி செயல்பாடுகளைத் தள்ளிப் போடுவது அல்லது சோம்பலால் செய்யாமல் இருப்பது.



## 6. ஓய்வெடுக்க...

ஓடுகின்ற குதிரை மேல்தான் பேரம் நடத்தப்படும். சாதிப்பவனுக்கும் வெற்றி பெறுபவனுக்கும் செயல் வீரனுக்கும்தான் மாலைகளும் மரியாதைகளும். தன்னால் முடிந்ததை, விரும்புவதை, கனவு காண்பதை செய்வதற்கு இளையோர்கள் ஆசைப்படுகின்றனர். ஆனால் அவர்களை இச்சமூகம், பெற்றோர், ஆசிரியர்கள் பந்தயக் குதிரையாகவே பார்க்கின்றது. அவர்கள் மீது தாங்கமுடியாத பாரங்களை சுமத்துகின்றது.

ஒவ்வொரு இளையோரும் சாதிக்க நினைக்கும் அதே சூழலில் ஓய்வெடுக்க விரும்புகின்றனர். இசையை ரசிக்க விரும்புகின்றனர், நண்பர்களுடன் நேரம் செலவிட விரும்புகின்றனர். இவைகளுக்கு நேரமில்லாதபோது இளையோர் சோம்பல் என்கின்ற போர்வைக்கு தன்னைப் புகுத்தி விடுகின்றனர்.

## 7. மன அழுத்தம்

இளைய வயதிலேயே மன அழுத்தத்திற்கு இளையோர்கள் உட்படுகின்றனர். படிப்பு ஒருபுறம், கனவுகள் ஒருபுறம், பிறரின் எதிர்பார்ப்புகள் ஒருபுறம், நண்பர்கள் ஒருபுறம், டிஜிட்டல் உலகின் தேவைகள் ஒருபுறம், காதல் அல்லது பிறபால் ஈர்ப்பு ஒருபுறம் – இளையோரை அழுத்துகின்றன. மன அழுத்தத்தை உருவாக்குகின்றன. மன அழுத்தத்தின் வெளிப்பாடாகவும் சோம்பல் அமைகின்றது.

விரும்பியோ, விரும்பாமலோ இளையோர்கள் சோம்பல் என்கின்ற போர்வையை போர்த்திக் கொள்கின்றனர். சோம்பல், தள்ளிப்போடுதல் போதை போன்றது. பழக்கமாகிப் போனால் நாம் அடிமையாகிப் போவோம். விடுபட்டு நார்மலாக வாழ்வது கடினமாகிப் போகின்றது.

*வெற்றி என்பது உன் நிழல் போல, நீ அதைத் தேடிப்போக வேண்டியதில்லை...*
*நீ வெளிச்சத்தை நோக்கி நடக்கும்போது உன்னுடன் வரும்...!*





சாதிக்க வேண்டிய இளையோர்கள், வாழ்வை அணுஅணுவாக ரசிக்க வேண்டிய இளையோர்கள், சமூக மாற்றத்திற்காக தன்னை அர்ப்பணிக்க வேண்டிய இளையோர்கள் சோம்பல், செயல் திட்டங்களை தள்ளிப்போடுவதால் நமது கண் முன்னாலேயே அழிவதை பார்க்க முடிகின்றது.

நான் சந்தித்து உரையாடுகின்ற பல இளையோர்கள் என்னிடம் கேட்கின்ற கேள்விகளுள் ஒன்று சோம்பலில் இருந்து விடுபடுவது எப்படி? செயல்திட்டங்களை தள்ளிப் போடாமல் உடனுக்குடன் செய்வது எப்படி?

உடனடி விடை இல்லை. ஆனால் விடை உண்டு. எனக்குத் தெரிந்த பயனுள்ள விடைகளில் ஒன்று எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்பதாகும். சோம்பலிலிருந்து விடுபடுவதற்கும் இந்தப் பழமொழிக்கும் என்ன தொடர்பு என்று நீங்கள் கேட்கலாம்.

தொடர்பு என்பதைவிட, சோம்பலுக்கான விடையே இதுதான்.

வாழ்வின் முரண்பாடு என்னவென்றால் சோம்பலான இளையோர் நினைத்தால் மட்டும்தான் சோம்பலில் இருந்து விடுபட முடியும்.



## 1. ஊர்ந்து செல்லத் துவங்கு...

எறும்புகள் ஊர்ந்து செல்லும் காட்சியை கண்களை மூடி உன் மனக்கண் முன்னால் கொண்டு வா. சின்ன எறும்புகள் அவைகள். வேகமாக காற்று அடித்தால் பறந்து விடும். துரும்பு மேலே விழுந்தால்கூட இறந்து விடும். அவைகள் மெதுவாக, மிகவும் மெதுவாக ஊர்கின்றன. பறக்கும் பறவைகளோடும், மின்னலென பாயும் புலிகளுடனும் அவைகள் தன்னை ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை. ஒவ்வொரு அடியாக, அதையும் மிகவும் நிதானமாக எடுத்து வைக்கின்றன. மிகவும் மெதுவாக ஊர்ந்தாலும் அவைகள் நகர்கின்றன. தான் செல்ல வேண்டிய இலக்கை நோக்கி நகருகின்றன.

மெதுவாக ஊர்ந்திட துவங்கு. ஒவ்வொரு அடியாக எடுத்து வை. மூன்று பாடங்கள், பதினெட்டு கேள்விகள் படிக்க வேண்டும். எப்படி என்னால் படிக்க முடியும்? ஐயோ முடியாது என்று சோம்பலுக்குள் தப்பித்துக் கொள்ளாதே. பதினெட்டு கேள்விகளிலும் உள்ள சின்ன கேள்விகளாக பொறுக்கி எடு. ஒவ்வொன்றாக படிக்கத் துவங்கு. ஆனால் படி. எறும்பு ஊர்வதை போல் ஊர்ந்து கொண்டே இரு. முதல் கேள்வி, 2ம் கேள்வி, 3ம் கேள்வி. ஏதோ ஒரு மகிழ்ச்சி உனக்குள் தென்படும். அந்த மகிழ்ச்சியை முதலாக்கு. 4, 5 என்று தொடர்ந்து கொண்டேயிரு.

ஒருபோதும் ஓடுவோரை, பறப்போரை பார்த்து உன்னை ஒப்பிட்டுப் பார்க்காதே. ஊர்ந்து கொண்டேயிரு. பறந்து செல்வோர் அடைந்த இலக்கை உன்னாலும் அடைய முடியும் என்கின்ற நம்பிக்கை பிறக்கும்.

## 2. ஒவ்வொரு நிலையாகக் கடந்து கொண்டேயிரு...

என்னுடைய வீட்டுக்குள் பொருட்கள் குவிந்து கிடந்தன. சுத்தமில்லை. எதுவும் பார்ப்பதற்கு அழகாயில்லை. ஒருநாள் அனைத்து பொருட்களையும் ஒழுங்குபடுத்த வேண்டுமென்ற நினைத்தேன். எண்ணமே என்னை சோம்பேறியாக்கியது. தள்ளிப்போட்டுக் கொண்டே வந்தேன். எறும்பு ஊர கல்லும் தேயும் என்கின்ற பழமொழி என்னை என் சோம்பலிலிருந்து மீட்க உதவியது. ஒவ்வொன்றாக ஒழுங்குபடுத்தத் துவங்கினேன். மெதுவாக, மிகவும் மெதுவாக பொருட்களை நகர்த்தினேன். ஒரு அறை சுத்தமானது, அழகானது. என் மனைவியும், பிள்ளைகளும் ஆச்சரியப்பட்டனர். அப்பா, சூப்பர் என்றனர்.

மீண்டும் ஊர்ந்து செல்ல துவங்கினேன். மெதுவாக, ஆனால், சோம்பலாக. சோம்பல் கொண்டாலும் நகர்த்திக் கொண்டே இருந்தேன். இரண்டாம் அறை சுத்தமானது. மதிய உணவு. தூங்கவேண்டும் போல் தோன்றியது. ஆனால் ஊர்வதை தொடர்ந்தேன். மீண்டும் பொருட்கள் நகர்ந்தன. வைக்க வேண்டிய இடங்களில் பொருட்கள் சென்று சேர்ந்தன. வீடு அழகாகத் துவங்கியது.

**எறும்பு ஊரக் கல்லும் தேயும், அடிக்க அடிக்க அம்மியும் நகரும் -** எனக்குள் சொல்லி மகிழ்ந்தேன். சோம்பலைத் தவிர்ப்பதற்கு, அதிலிருந்து விடுபடுவதற்கான மிகவும் சிறந்த வழி ஊர்ந்து செல்ல ஆரம்பிப்பதும், ஊர்ந்துகொண்டே ஒவ்வொரு நிலையாக கடப்பதும்.

மாற்றம் தொடர் முயற்சியால் மட்டும்தான் சாத்தியம். பிணமாக செயலற்றுப் போவதைவிட, பாய்ந்து செல்வோரை பொறாமையுடன் பார்ப்பதை விட, ஊர்ந்து சென்று சாதிப்பதுதான் சிறந்தது. **படிப்பதாக இருந்தாலும், சமூகப் பணியாக இருந்தாலும், விளையாட்டாக இருந்தாலும், மனமகிழ் நிகழ்வுகளாக இருந்தாலும் - ஊர்ந்திடத் துவங்கு... இலக்குகள் உன் வசப்படும். நீ ஊர்ந்த பாதை வரலாறாகும்.**

ஊர்ந்து ஊர்ந்து செல்பவன்... **தே. சைலட் மோனி**



அவரவர் செயல்களின் அணுகுமுறைகளைப் பொறுத்தே வெற்றி தோல்விகள் தீர்மானிக்கப்படுகின்றன...

விஷன் நிறுவனத்தின் தலைமை செயல்அதிகாரியும் நிறுவனருமான

# டாக்டர் மீரா பத்மராஜா அவர்களுடன் ஒரு நேர்காணல்



2003-ஆம் ஆண்டு **மீரா** அவர்கள் அமெரிக்க இளைஞர்கள் சிலரை இலங்கையில் உள்ள மட்டக்களப்பு பகுதிக்கு அழைத்துச் சென்று அங்குள்ள இளையோருக்கு தலைமை பயிற்சி அளித்தார்கள். அந்த நிகழ்வுதான் விஷன் குளோபல் எம்பவர்மென்ட் (Vision Global Empowerment) என்கின்ற நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக அமைந்தது.

2005 முதல் 2009-ஆம் ஆண்டு வரை அவர்கள் ஆசிய பிராந்தியத்தின் திட்ட அலுவலராகப் பணியாற்றினார்கள். அப்போது தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் (ஏழு நாடுகள்) கல்விக்கான திட்டங்களை வரைந்திட உதவினார்கள்.

உளவியல் துறையில் இளங்கலை படிப்பும், தெற்கு ஆசியா பற்றிய மேற்படிப்பினை கலிபோர்னியா பல்கலைக் கழகத்திலும், சர்வதேச கல்வி பற்றி படிப்பினை ஹாவர்டு பல்கலைக் கழகத்திலும், சர்வதேச கல்விக் கொள்கை பற்றிய படிப்பினை கொலம்பியா பல்கலைக் கழகத்திலும் முடித்துள்ளார்கள். தற்போது சான்பிரான்ஸிஸ்கோ பல்கலைக் கழகத்தில் இணை பேராசிரியராக பணியாற்றி வருகின்றார்கள்.

அவர்களுடன் கிரேக் அவர்கள் நிகழ்த்திய கலந்துரையாடலின் முக்கியக் கருத்துக்கள் இங்கே தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

1. **2017ஆம் ஆண்டினைக் குறித்து நீங்கள் உற்சாகப்படும் விஷயங்கள் என்ன?**

புதிய வருடத்தின் துவக்கம் மிகவும் உயர்ந்த நம்பிக்கையும் வாய்ப்புகளையும் குறிப்பதாக அமைகின்றது. புதிய தீர்மானங்களை எடுப்பதும், கடந்த வருடத்தின் கசப்பான அனுபவங்களை மறப்பதும் புதிய வருடத்தின் துவக்கத்தில் நிகழ வேண்டும். 2017-பற்றிய சிந்தனை எனக்குள் மட்டற்ற மகிழ்ச்சியையும், புதிய உணர்வுகளையும் உருவாக்குகின்றது. நேர்மறை மாற்றங்கள் நிகழப் போகும் தருணமாக புதிய ஆண்டின் துவக்கத்தை நான் பார்க்கின்றேன்.

2. **2017ஆம் ஆண்டிற்காக உங்களுடைய தனிப்பட்ட மற்றும் தொழிற்சாற் குறிக்கோள்கள் என்ன?**

தனிப்பட்ட விதத்தில் என்னுடைய இரண்டாவது குழந்தையின் பிறப்பினை ஆவலுடன் எதிர்பாக்கிறேன். ஜுன் மாதம் என்னுடைய குழந்தை பிறக்கப் போகிறது. அதுவரை நான் வாரம் 8 கிலோ மீட்டர் தூரம் நடந்திட வேண்டும். இந்தக் குறிக்கோளை அடைந்திட ஒரேவழி நானும் என் கணவரும் ஒரு வருட வயது நிரம்பிய என்னுடைய குழந்தையை ஓடவிட்டு பின்னால் நடப்பது. இரண்டாவது குழந்தை நிச்சயமாக நிறைய சந்தோஷங்களை எங்களுக்கு தரவிருக்கின்றது.

தொழில்சார் விதத்தில் சான்பிரான்ஸிஸ்கோ பல்கலைக்கழகத்தில் வகுப்புகள் எடுப்பது, ஆராய்ச்சி புத்தகம் ஒன்று எழுதுவது மற்றும் விஷன் திட்டங்களுக்கு உதவுவதாகும். குறிப்பாக விஷன் நிர்வாகக் குழுவுக்கு புதிய உறுப்பினர் ஒருவரை சேர்ப்பதும், விஷன் திட்டங்களை விரிவாக்கம் செய்வதும், குறிப்பாக வடக்கு இலங்கை பகுதியில் விஷன் திட்டங்களை கொண்டு செல்லுவதுமாகும்.

3. **ஆசிரியர்களும், மாணவர்களும் 2017-ம் ஆண்டில் கருத்தில் கொள்ளவேண்டியவைகள் என்ன?**

கல்வித் துறையில் வேகமாக மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. தொழில்நுட்பங்கள் கல்வி வழங்கிடும் முறையில் அபரிமிதமான மாற்றங்களை கொண்டுவந்துள்ளது.

(உ-ம்) குழந்தைகள் வீட்டில் ஆசிரியர்கள் பாடம் புகட்டிடும் வீடியோக்களை பார்க்கின்றனர். பள்ளிக்கூடத்தில் அவைகள் குறித்த சந்தேகங்களை ஆசிரியர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்கின்றனர். பள்ளியில் தான் கற்ற கருத்துக்களை வாழ்வோடு பள்ளிக் கூடங்களில் பொருத்திப் பார்க்கின்றனர். பள்ளிக் கூடங்களில் ஆசிரியர்கள் நிறைய நேரம் மாணவர்களின் சந்தேகங்களை போக்குவதில் செலவழிக்கின்றனர்.

குழுவேலை, திட்டப்பணி கற்றலில் மிக முக்கியமான பங்காற்றுகிறது. கற்றல் குழுக்கள் கற்பதை எளிதாக்குகின்றன.

ஒவ்வொரு மாணவனும், மாணவியும் நிறைய அனுபவங்களுடனும், அறிவுடனும் வகுப்பிற்கு வருகின்றனர் என ஒவ்வொரு ஆசிரியரும் நினைத்திடவேண்டும். ஒரு மாணவனுக்கு என்ன தெரியும் என்பதை ஆசிரியர் புரிந்து கொண்டு அதனை மேம்படுத்திட உதவிட வேண்டும்.

4. **2017-ஆம் ஆண்டு உலகளவில் எத்தகைய மாற்றங்கள் நிகழும் என நம்புகிறீர்கள்?**


உலகளவில் அரசியல் குழப்பங்கள் மிகவும் அதிகமாக நிகழும். 2017-ஆம் ஆண்டில் சிந்தனையால், கோட்பாடுகளால் பிரிந்துள்ள சமூகங்கள் அடுத்தவர்கள் என்ன கூறுகின்றார்கள், அவர்களது கருத்துக்கள் என்ன என்று கேட்டிட தங்கள் இதயங்களையும் மனதினையும் திறப்பார்கள் என நம்புகின்றேன். பேச்சு வார்த்தை தான் பிரச்சனைகளுக்கான தீர்வாக அமைந்திட முடியும்.

சுயநலமும், பேராசையும் மலிந்து கிடக்கின்றது. ஏழைகளின் பால் அக்கறை குறைந்து வருகின்றது. தனி மனிதனாக, நிறுவனமாக, ஒரு சமூகமாக, ஒரு நாடாக நமது செயல்பாடுகள் பிறரை எவ்வாறு பாதிக்கின்றது என்பது குறித்து கவனமாக இருக்க வேண்டும்.

ஒரு சமூகமாக மிகவும் பாதிக்கப்பட்ட சமூகங்களை தேடிச் சென்று நாம் உதவிட வேண்டும். சமூகத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகள், அடிமைத்தனம், மத சகிப்பின்மை, பெண் வன்கொடுமை இவைகளைப் பற்றி திறந்த உள்ளத்தோடு பேசிட வேண்டும். இத்தகைய உரையாடல்கள் வகுப்பறைகளிலிருந்து ஆரம்பமாக வேண்டும்.



மனிதன் இறப்பது ஒருமுறைதான்... ஆதலால் அஞ்சாதிரு! வீரனாக இரு!
– விவேகானந்தர்



# இப்போது இல்லையென்றால் எப்போது? இல்லையென்றால் நீ யார்?

முனைவர்.
க. பழனித்துரை

அமெரிக்காவில் ஒரு பல்கலைக் கழகத்தின் சின்னத்தில் இப்பொழுது இல்லை எனில் எப்பொழுது, நான் இல்லையேல் வேறு யார் என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த வாசகம் சொல்லும் செய்தி என்ன? என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இன்று நாம் ஒரு புது யுகத்தில் வாழ்கிறோம். இந்த யுகம் வித்தியாசமானது. நாம் இதுவரை கண்டிராத அளவிற்கு மாற்றங்கள் நம் சமுதாயத்தில் நடந்து வருகின்றன. நமக்கு வாய்ப்புகளையும், ஆபத்துக்களையும் தாங்கியதாகவே இந்த யுகம் காட்சியளிக்கிறது. இந்த மாற்றங்களால் மானுடம் சந்திக்கின்ற பிரச்சனைகள் ஏராளம். இவைகளை எப்படி சமாளிப்பது, யார் சமாளிப்பது, எப்போது சமாளிப்பது. நாளையா? அடுத்த வாரமா? அடுத்த மாதமா? அடுத்த ஆண்டா? அல்லது அடுத்த பிறவியா? என்பதுதான் கேள்வி.

எதிர் நிற்கும் பிரச்சனைகளைக் கண்டு மயங்காதே, தயங்காதே, அஞ்சாதே. உன் எதிர் நிற்கும் பிரச்சனைகள் அனைத்தும் உனக்காக வாய்ப்புகளை ஏந்தி வந்து உன் முன்னே நிற்கின்றன. அதனைச் சமாளிக்க உடனே செயல்பட முனைய வேண்டும். முனைப்போடு முடிவெடுத்து களத்தில் உடனே இறங்க வேண்டும் என்பதுதான் அந்தச் சின்னத்தில் பொறிக்கப்பட்டுள்ள முதல் வாக்கியம். அதே சின்னத்தில் அடுத்த வாக்கியம் ஒன்றும் இருக்கிறது. இந்த வாக்கியம் **நான் இல்லையெனில் யார்** என்று பொறிக்கப்பட்டுள்ளது. யார் முனைவது, உனக்குப் பக்கத்தில் இருப்பவரா? பக்கத்து தெருவில் இருப்பவரா? அல்லது பக்கத்து கிராமத்தில் இருப்பவரா? அது வேறு யாரும் அல்ல... நீயே தான்! நீ இல்லை என்றால் யார் செய்வது? நீயேதான்.

அந்தப் பல்கலைக் கழகம் தங்களுடைய பல்கலைக் கழகத்தில் பயின்ற மாணவர்கள் எப்படி இருப்பார்கள் என்றால் எதையும் எந்த நேரத்திலும் சமாளிக்கும் திறன் கொண்டவர்களாக இருப்பார்கள். அத்துடன் தன்முனைப்பு கொண்டவர்களாக, தன்னம்பிக்கை கொண்டவர்களாக இருப்பார்கள் என்று உறுதியுடன் கூறுகின்றது. அப்படிப்பட்ட தயாரிப்பை அந்தப் பல்கலைக் கழகம் செய்கிறது என்பதைத் தான் அந்தப் பல்கலைக் கழகம் மூலக்கருவாக அந்தச் சின்னத்தில் பதித்து வைத்துள்ளது.

இதை இங்கு சொல்லுவதற்கான காரணம் இன்று நாம் சந்திக்கின்ற பிரச்சனைகள் மானுடம் இதுவரை கண்டிராதவைகள். இன்று நாம் பார்க்கும் மாற்றங்கள் இதுவரை நாம் கண்டிராதவைகள். இந்த மாற்றங்களைத் தொழில்துறை, தொழில்நுட்பத் துறை என அனைத்துத் துறைகளும் உள்வாங்கி மாறிவிட்டன. ஒரு துறை மட்டும் மாற சிரமப் படுகிறது. அதுதான் அரசியல், அதுதான் ஆளுகை, அதுதான் நிர்வாகம். ஏனென்றால் இந்தத் துறைகள்தான் அறிவுஜீவிகள் குறைந்த எண்ணிக்கையில் உள்ள துறைகள். இந்த மாற்றங்களைப் புரிந்து உள்வாங்கிக்கொண்டு ஆளுகையையும், நிர்வாகத்தையும் சரி செய்து கொள்ளவில்லை என்றால் மானுடம் சிக்கலுக்கு உள்ளாகி சீரழியும் அபாயம் இருப்பதை உலகம் முழுவதும் மானுட மேம்பாடு பேசும் அறிஞர்கள் தொடர்ந்து எழுதியும் பேசியும் வருகின்றனர். உலகத்தில் நாடுகள் செழித்தது விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆளுகை இவைகளை அறிவுப்பூர்வமாக மானுடம் கையாண்ட காரணத்தினால்தான்.

எனவே அறிவு சார்ந்த செயல்பாடே இன்றைய தேவை நம் ஆளுகைக்கு. இந்த உலகமயமான பொருளாதாரம் மக்களுக்கு வாய்ப்புகளையும், சவால்களையும் கொடுத்துக் கொண்டுள்ளது. எப்படி தொழிற்புரட்சியும், தொழில் மயமும் வாய்ப்புகளையும் சவால்களையும் தந்ததோ, அதேபோல்தான் இன்று இந்த புதிய பொருளாதார இயக்கம் மக்களை திகைக்க வைத்துக் கொண்டுள்ளது. இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையால் வரும் வாய்ப்பை எப்படிப் பயன்படுத்துவது, அதன் மூலம் வரும் சவால்களை எப்படிச் சமாளிப்பது, அதேபோல் இதனால் வரும் ஆபத்துக்களை எப்படித் தவிர்ப்பது என்ற பார்வையும் அணுகுமுறையும் நம் ஆட்சியாளர்களுக்கு இருக்க வேண்டும். அது ஏதோ நாட்டின் பிரதமருக்கும், மாநிலத்தில் இருக்கும் முதல்வருக்கும் இருக்க வேண்டும் என்று எண்ணி நாம் வாழா இருக்க முடியாது.



கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே, அது உன்னை கொன்றுவிடும்! கண்ணை திறந்து பார், அதை வென்றுவிடலாம்!
– டாக்டர். அப்துல் கலாம்

நாட்டின் குடியரசுத் தலைவரில் ஆரம்பித்து, கிராமத்துப் பஞ்சாயத்து தலைவர் வரை அனைவரும் மாற்றத்திற்கும் சீர்திருத்தத்திற்கும் தேவையான மனோபாவத்தையும், திறமையையும், ஆற்றலையும், வலிமையையும் பெற்றவர்களாக மாறவேண்டும். அப்போதுதான் ஒரு நாடு அல்லது சமுதாயம் முன்னேற முடியும். முன்னேறுவது மட்டுமல்ல, ஒரு சமூகம் அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் ஒரு மதிக்கத்தக்க, மதிப்புடைய மானுட வாழ்க்கையை கொண்டதாக இருக்க முடியும். இல்லையெனில் மானுடம் விலங்குகள் வாழும் சூழலில் வாழ வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாக்கப்படும்.

இந்தியாவில் அனைவரும் எதிர்பார்ப்பது உலகமயமான பொருளாதாரச் சூழலில் இளைஞர்கள் தங்களின் திறன்களை, ஆற்றல்களை செய்தொழில்களில் வளர்த்துக் கொண்டால் மிகப்பெரிய வேலைவாய்ப்பு நம் இளைஞர்களுக்கு உலகம் முழுவதும் இருக்கின்றது. எனவே திறன் வளர்த்தல்தான் இன்றைய தேவை என்று அனைவரும் கூறுகின்றனர். இதைவிட மிக முக்கியமாக சமூக மாற்றத்திற்கான பொருளதார அரசியல் மாற்றத்திற்கான வாய்ப்பும் நம் இளைஞர்களுக்கு இருக்கின்றது. அதைப் பற்றி பலரும் பேசுவது, கருத்து சொல்வது, விவாதிப்பது இல்லை.

அரசியல், ஆட்சி, ஆளுகை என்பதை நம் நாட்டில் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்க முடியாமல் இடைநின்ற மாணவர்களிடமும், அரசியல்வாதிகளின் வாரிசுகளின் கையிலும் விட்டுவிட்டு நம் அறிவை, ஆற்றலை மாதச் சம்பளத்திற்கு உட்படுத்திக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளோம். இந்த நிலை நீடித்தால் அரைவேக்காட்டு தற்குறிகள் பொதுப் பணத்தைச் சூறையாடி சொகுசு வாழ்க்கை வாழும் உதவாக்கரை ஊழல் அரசியல்வாதிகளின் கீழ் நாம் வாழும் சூழல் மாறப்போவது இல்லை. படித்த, பண்புள்ள, திறனுள்ள, ஆற்றலுள்ள, போராடும் குணமுள்ள, சாதிக்க வேண்டும் என்ற வெறியுள்ள, மக்களின்மேல் நம்பிக்கையுள்ள, மக்களாட்சியில் நம்பிக்கையுள்ள இளைஞர் கூட்டம் இப்பொழுது செல்ல வேண்டிய இடம் அரசியல். அங்கு சென்று இவர்களும் இன்றைய சராசரி அரசியல்வாதிகள் போல் செயல்படுவதற்காக அல்ல.

இன்றைய இளைஞர்கள் செய்ய வேண்டியது மாற்று அரசியல், மாற்றத்திற்கான அரசியல். அதுதான் கட்சியிலிருந்து மாறிய மக்கள் அரசியல். இந்த அரசியல் இன்றைய அரசியலிலிருந்து மாறுபட்டது. இந்த அரசியலுக்குப் பணம் தேவையில்லை. அந்த அரசியல் புதிய பாதையில் பயணிக்கும். அது மக்கள் அரசியல், அது மேம்பாட்டு அரசியல். அது கட்சி அரசியல் அல்ல. எல்லா இடங்களிலும் புதுமைகள் செய்யும் இளைஞர்கள், அரசியலில் புதுமையை புகுத்த அரசியலுக்கு வரவேண்டும். அதற்கு முதல்படி, முதலில் ஒரு படித்த, ஆற்றலுள்ள, திறனுள்ள, ஒழுக்கம் நிறைந்த, பண்புள்ள ஒரு இளம்வயது ஆணோ, பெண்ணோ கிராமப் பஞ்சாயத்தில் தலைவராக அடி எடுத்து வைக்க வேண்டும். அங்கு கட்சி சாயமின்றி தேர்தலில் போட்டியிட முடியும். அங்கு உங்கள் திறமையை, ஆற்றலைப் பயன்படுத்தி மக்களிடம் ஒரு நம்பிக்கையைப் பெறுங்கள்.

ஊழல் ஆறாக ஓடும் ஒரு அரசியல் சதுரங்கத்தில் பணம் செலவழிக்காமல் வெற்றி பெற்ற தலைவர்களை நாம் பார்த்து வருகின்றோம். அதேபோல் லஞ்சம் பெறாமல், லஞ்சம் கொடுக்காமல், கிராமங்களையே தங்களின் செயல்களால் புரட்டிப் போட்ட குட்டி மகாத்மாக்களை பஞ்சாயத்துக்களில் நாம் பார்த்து வருகின்றோம். அதைத்தான் 55 கட்டுரைகளாக இந்துப் பத்திரிக்கையில் கள ஆய்வு செய்து சஞ்சீவ்குமார் அவர்கள் எழுதி மிகப் பெரிய வரவேற்பையும், மக்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளார். அந்தத் தலைமைதான் மாற்றுத் தலைமை என்கிறார். அவர்கள்தான் மாற்றம் கொண்டு வருவார்கள் என்கிறார். அவர்கள்தான் நம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் முன்னுதாரணம் என்கிறார். அவர்களின் வெற்றி என்பது சாதாரணமான வெற்றி அல்ல. மிகப் பெரிய போராட்டத்திற்குப் பிறகு கிடைத்த வெற்றி. அந்தப் போராட்டத்தை நாம் ஆய்வு செய்தால் நமக்குத் தெரியும் அவர் எப்படிப்பட்ட தலைவர் என்பது.

எனவே ஒரு கிராம நகர அடிப்படை மாற்றத்திற்கான வேள்வியை மேற்கொள்ளப் புறப்பட நீங்கள் தயாரா? என்று பொது வேலைக்குச் செல்ல எத்தணித்த இளைஞர்கள் சிந்திக்க வேண்டும். நாம் பரிணாம வளர்ச்சியில் சிந்திக்கும் ஆற்றல் படைத்தவர்கள். சிந்தனை என்பது உயர்வுக்காக.உயர்வு என்பது உயர்நிலைச் செயல்பாடாகும். அது எப்போதும் புதுமைகள் நிறைந்தது. அதே நேரத்தில் ஆபத்தானது. புதுமையையும், ஆபத்தையும் நோக்கிப் பயணித்த மனிதர்கள்தான் சமூகத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்தவர்கள்.

**எனவே புதுமைகள் நிறைந்த மக்கள் அரசினை உருவாக்க உள்ளாட்சியில் பயணிக்க புறப்பட இதைவிட நல்ல தருணம் எது? உங்களைவிட சிறந்தவர் யார்?**


**நன்கொடைகள், விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன**

| | |
|---|---|
| முன் அட்டை உள்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 7000/- |
| பின் அட்டை வெளிப்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 10000/- |
| பின் அட்டை உள்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 7000/- |
| உள் முழு பக்கம் (ஒரு கலர்) | ரூ. 3000/- |
| உள் அரை பக்கம் (ஒரு கலர்) | ரூ. 1000/- |


*பத்தாவது முறையாக கீழே விழுந்தவனைப் பார்த்து, பூமி முத்தமிட்டுச் சொன்னது நீ ஒன்பது முறை எழுந்தவன் என்று...!*



# KNOW ENGLISH Experience SUCCESS

*I. Joseph Sahayaraj*

**Simple Dialogue for Greeting between a Visitor and a Host**

V - Hello, Happy New Year, everyone!

H - Happy New Year! Come in, Come in.

V - Thank you, Mr. Daniel.

H - What would you like to have? Would you like some cake or a sandwich?

V - I prefer cakes.

H - Yes, and to drink? Tea or Coffee?

V - Coffee, please.

H - My friend, have a pleasant evening.

V - I really enjoyed your hospitality, thank you so much.

H - You are most welcome.

**2nd Sentence Pattern**

| Subject | "Have Verb" | Compliment |
|---|---|---|
| I | have | a hat. |
| My mother | has | a two-wheeler |

**Examples:**

1. I have a hat.
2. We have a car.
3. You have a good job.
4. He has a bicycle.
5. My sister has a laptop.
6. They had a big house.
7. I will have a television.
8. Tiruvannamalai has a famous temple.
9. She has two children.
10. You have a beautiful smile.

| | | | |
|---|---|---|---|
| I | have | had | will have |
| He, she, it | has | had | will have |
| You, they, we | have | had | will have |

**Questions**

1. What do you have? - I have a pen.
2. Do you have a hat? - Yes, I have a hat.
3. Do you have a bicycle? - I do not have a bicycle.
4. Does your sister have a laptop? - Yes, my sister has a laptop.
5. Do they have their own house? - No, they do not have their own house.
6. Does he have a good job? - Yes, he has a good job.
7. How many children does she have? - She has two children.
8. Do you have after-school study? - Of course, we study regularly.
9. Do your children have a playground? - Yes, our children have a playground.
10. Will your mother have a two-wheeler? - My mother will have a two-wheeler

## Use the Right word / Know the Meaning / Make the Sentence

1. **Abuse** (Verb) - to say bad words
   * It is rude to **abuse** others
2. **Misuse** (verb) - to mishandle
   * Do not misuse things that do not belong to you









கஷ்டப்படுகிறவன் கிட்ட சிரிப்பு இருக்காது... சிரிக்கிறவன் கிட்ட கஷ்டம் இருக்காது... ஆனால், கஷ்டத்தில் சிரிக்கிறவன் கிட்ட தோல்வி இருக்காது...!





**2017–ஆம் ஆண்டு பயனுள்ள ஆண்டாக அமைந்திட நீங்கள் உடல் ஆரோக்கியம் உடையவர்களாக இருப்பது அவசியம். எனவே வீட்டுக் காய்கறித் தோட்டங்கள் அமைத்திடுவோம்... ஆரோக்கிய வாழ்விற்கு வித்திடுவோம்...**

# இளையோரும் வீட்டுக் காய்கறி தோட்டமும்

**வீட்டுக் காய்கறி தோட்டம் அமைப்பத்தில் முன்னிலையில் இருக்கும் திருமதி. பங்கயவல்லி அவர்களுடன் ஓர் கலந்துரையாடல்**

### 1. வீட்டு காய்கறி தோட்டங்கள் இன்று பிரபலமாகி வருவதற்கான காரணங்கள் என்ன?

நாம் உண்ணும் உணவு முறையில் மற்றும் வாழ்வியல் முறையில் ஏற்பட்ட மாற்றம் பயிர்களில் தெளிக்கப்படும் அதிக அளவிளான பூச்சிக்கொல்லிகள் போன்றவையால் நகர்புறம் மற்றும் கிராமப்புற குழந்தைகள் முதல் இளைஞர்கள் மற்றும் முதியோர்கள் வரை அனைவரையும் பல விதமான நோய்கள் தாக்கி வருகிறது.

பாதுகாப்பான உணவு என்பது இயற்கை விவசாய முறைகளில் உற்பத்திச் செய்து உண்பதே ஆகும். இந்த இயற்கை விவசாய முறைகள் நம் முன்னோர்கள் செய்து வந்த விவசாயம். நவீன விவசாயத்தில் இரசாயண பூச்சிக்கொல்லிகள் பயன்பாடு அதிகம் உள்ளது. இவை உடல் நலத்திற்கு கேடு விளைவிப்பதுடன் சுற்றுச் சூழலையும் பாதிப்படையச் செய்கிறது. எனவே நாம் நமக்கு இருக்கும் இடங்களில், பால்கனிகளில் மற்றும் மாடியில் நமது தேவைக்கேற்ப காய்கறி உற்பத்தி செய்யலாம்.

மாடியில் உள்ள இடங்கள் பெரும்பாலும் துணிகாயப்போடுதல், வற்றல் மற்றும் வடகம் காயவைத்தல் தவிர வருடம் முழுவதும் எந்த பயனுமின்றி இருக்கிறது. இந்த மாடியை நாம் காய்கறி உற்பத்திக்கு பயன்படுத்தினால் நமக்கு வீட்டிலேயே ஆரோக்கியமான, புத்தம்புதிய காய்கறிகள் கிடைக்கும்.

இன்று சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை போன்ற நகர்புறவாசிகள் தங்கள் வீட்டு மாடியை காய்கறி பயிரிட பயன்படுத்த துவங்கி விட்டனர். விவசாயம் செய்ய இன்று படித்த இளைஞர்கள், மத்தியில் ஆர்வம் பெருகி வருகிறது. பெரிய அளவில் முதலீடு செய்ய இயலாதவர்கள் தங்கள் வீட்டில் உள்ள சிறிய பகுதி , மாடிகளில் நமக்கு தேவையான காய்கறிகள், கீரைகள், மூலிகை செடிகள், வீட்டுக்கு தேவைப்படும் மரக்கன்றுகள் வைக்கலாம்.

மாடித்தோட்டம் மூலம்

1. விஷமில்லா / நஞ்சற்ற காய்கறிகள் கிடைக்கும்
2. புதிய / விரும்பிய காய்கறிகள் பயிரிடலாம்
3. வருடம் தோறும் பயிரிடலாம்.
4. மாடியில் வெற்றிடத்தை பயன்படுத்துதல்
5. நல்ல உடற்பயிற்சி கிடைப்பதால் உடல் ஆரோக்கியமாக இருக்கும்.
6. மனசு உற்சாகமாக இருக்கும் / நல்ல பொழுது போக்காகவும் இருக்கும்
7. சுற்று சுழலுக்கு பாதுகாப்பு
8. குழங்தைகள் காய்கறிகள் விளைவிக்கும் முறைகளை நேரடியாக அறிந்து கொள்வதுடன் விரும்பி உண்ண ஆரம்பிப்பர்.

### 2. மாடித்தோட்டத்தில் எத்தகைய காய்கறிகளைப் பயிரிடலாம்?

1. கொத்தவரை
2. வெண்டை
3. கத்தரி
4. தக்காளி
5. மிளகாய்
6. வெங்காயம்
7. முள்ளங்கி
8. அவரை
9. பாகற்காய்
10. பீட்ரூட்
11. கேரட்
12. காலிபிளவர்
13. முட்டைகோஸ்

கீரைகள் - அரைக்கீரை, முளைக்கீரை, பாலக் கீரை மற்றும் பசலைகீரை வகைகள்

பழ மரங்கள் - எலுமிச்சை, சப்போட்டா, கறிவேப்பிலை, சுண்டைக்காய், பப்பாளி, செடி முருங்கை

3. எந்த காலங்களில் எத்தகைய காய்கறிகளைப் பயிரிடலாம்? அதற்கான முறைகள் என்ன?

ஜூலை மாதம் முதல் ஜனவரி வரை அனைத்து காய்கறிகளையும் பயிரிடலாம். கோடைகாலங்களில் வெப்பத்தை தாக்குபிடிக்கும் காய்கறிகளையும் பயிரிடுவது நல்லது.

வெண்டை, கொத்தவரை, முள்ளங்கி, அவரை, வெங்காயம் போன்றவை நேரடியாக நடவு செய்யலாம். கத்தரி, மிளகாய், தக்காளி நாற்று விட்டு நடவு செய்வது சிறப்பு.

4. தொட்டியில் காய்கறி செடிகளை வளர்க்கும் போது மணல்கலவை எவ்வாறு தயாரிக்க வேண்டும்?

தென்னை நார் கழிவு -70 சதவீகிதம், மண்புழு உரம் 15 சதவீகிதம் மற்றும் செம்மண் 15 சதவீகிதம் என்ற அளவு கோலில் பாலீதின் பாக்கெட் (யூ.வி. கதிர்களை தாங்கும்) அல்லது பச்சை வண்ண பைகளில் பயிரிடலாம். மேலும் வீட்டில் கிடைக்கும் உடைந்த டப்பாக்கள், பாட்டில்கள், வாளிகளிலும், பானைகளிலும், மண் தொட்டிகளிலும் வளர்க்கலாம்.

மாடித்தோட்டம் அமைக்க என தயாரிக்கப்பட்டுள்ள பைகள் (Grow bag) தற்போது தனியார் வேளாண் கடைகளில் கிடைக்கிறது. இவை எடை குறைவாக இருக்கும். இவைகள் பயன்படுத்தும் போது நமக்கு விருப்பமான இடங்களில் மாற்றி வைத்துக்கொள்ளலாம். மேலும் தென்னை நார்க்கழிவு எடை குறைவாக இருப்பதால் எளிதாக மாற்றி அமைக்கமுடியும். மாடியும் பாதுகாப்பாக இருக்கும்.

தென்னை நார்க்கழிவு ஈரத்தை காக்கும், வேர் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

5. காய்கறி விதைகளை எங்கு வாங்கலாம்? விதைத் தேர்வு எவ்வாறு இருக்க வேண்டும்?

காய்கறி விதைகள் அரசு தோட்டக்கலைத் துறை மற்றும் தனியார் வேளாண் விற்பனை மையங்களில் கிடைக்கும். உயர்ரக மற்றும் வீரிய ரக காய்கறி பயிர்களை பயிரிடுவதை காட்டிலும் நாட்டு ரக காய்கறிகளின் விதைகளைப் பயன்படுத்துதல் சிறந்தது. இதனால் பூச்சி மற்றும் நோய் தொல்லை குறைவாக இருக்கும்.

விதை நேர்த்தி செய்வதால் வேர் அழுகல் நோய் கட்டுப்படுத்தப்படும், மேலும் விதை முளைப்பு திறன் மற்றும் வளர்ச்சி செழுமையாக இருக்கும். எனவே அசோஸ்பயிரில்லம், பாஸ்போபாக்டீரியா, சூடோமோனஸ் போன்ற இயற்கை உயிர்உரங்களைக் கொண்டு விதைநேர்த்தி செய்ய வேண்டும்.

6. உர மேலாண்மை பற்றி குறிப்பிடுங்களேன்...

முதலில் அடியுரமாக மண்புழு உரமும் மேலுரமாக அதிக நுண்ணூட்ட சத்துடைய வேப்பம் புண்ணாக்கு, மற்றும் இரண்டாம் முறை மண்புழு உரமும் பயன்படுத்தலாம்.

பயிர் ஊக்கிகளான - பஞ்சகாவியத்தை 15 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்கலாம். பஞ்சகாவியம் பசு மாட்டின் மூலம் கிடைக்கும் பால், தயிர், நெய், கோமேயம் (மாட்டு சிறுநீர்), மற்றும் சாணம் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

பூச்சிகளைக் கட்டுப்படுத்த கோமேயம் மற்றும் கசப்பு இலைகளை பயன்படுத்தி தயாரிக்கப்படும் மூலிகை பூச்சி விரட்டி பயன்படுத்தலாம்.

7. காய்கறிகளைத் தாக்கும் பொதுவான நோய்கள், பூச்சிகள் என்ன? அவைகளில் இருந்து செடிகளைப் பாதுகாப்பது எப்படி?

வெண்டைக்காய், தக்காளி, கத்திரியில் பூச்சி தாக்குதல் அதிகம் இருக்கும்.

வெண்டைகாயில் காய்துளைப்பான், அசுவினி அதிகம் காணப்படும். இனக்கவர்ச்சிப்பொறி கொண்டு இவைகளை அழிக்கலாம். மஞ்சள் நரம்பு தேமல் நோய் பாதிப்பு ஏற்படும். - இந்த நோய் வெள்ளை ஈ மூலம் பிற செடிகளுக்கு பரவும். வேப்பண்ணை கரைசல் கொண்டு இந்த ஈயை கட்டுப்படுத்தலாம்.

தக்காளி: காய்ப்புழு - இனக்கவர்ச்சி பொறி மூலம் கட்டுப்படுத்துதல். பாக்டீரியா வாடல் நோய் - பாதிக்கப்பட்ட செடிகளை அகற்றுதல்.

மிளகாய் செடியில் ஏற்படும் இலை சுருட்டு நோயைத் தவிர்க்க பாதிக்கப்பட்ட செடிகளை களையவேண்டும்.

8. காய்கறி செடிகளை இயற்கையாகவே வளர்த்தெடுக்க முடியுமா? அவ்வாறு வளர்க்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவைகள் என்ன?

காய்கறிச் செடிகளை இரசாயண உர பயன்பாடில்லாமல் வளர்க்கமுடியும். இயற்கையாக வளர்க்கும் போது முன்னேற்பாடாக நமக்கு தேவையான இயற்கை உரம் மற்றும் பூச்சி விரட்டிகளை தயாரித்து வைக்க வேண்டும். நம்மால் தயாரிக்க போதிய பொருட்கள் இல்லையென்றால் பால்காரர்கள் மூலம் சாணம், கோமேயம் கிடைக்கப்பெற்று தயாரிக்கலாம். அல்லது இயற்கை முறையில் செய்து தரும் நபர்களிடம் இருந்து வாங்கலாம்.

8. காய்கறிகளில் காணப்படும் சத்துக்கள் என்ன?

குழந்தைகளுக்கு காய்கறிகள் மூலம் உணவில் ஆற்றல், வைட்டமின், நார்ச்சத்து, நீர்சத்து மற்றம் ஆண்டி ஆக்சிஜன் கிடைக்கிறது. வைட்டமின் சத்துக்கள் கண், தோல், பற்கள் மற்றும் ஈறுகள் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது. நார்ச்சத்துக்கள் கெட்ட கொழுப்பை நீக்குகிறது. இதயநோய் வராமல் தடுக்கிறது. நஞ்சில்லா காய்கறிகள் உண்ணும் போது நோய் தாக்குதல் இன்றி ஆரோக்கியமாக இருப்பர்.

9. காய்கறித் தோட்டம் அமைத்திட உங்கள் ஆலோசனைகள் என்ன?

காய்கறி தோட்டம் அமைக்க எண்ணும் குழந்தைகள் தங்களுக்கு உள்ள இடவசதியை பொறுத்து காய்கறி தோட்டம் அமைக்க திட்டமிடலாம். மாடியில் 100 சதுரஅடி இருப்பின் 30-



யாருக்காகவும் உன்னை மாற்றிக்கொள்ளாதே... ஒருவேளை மாற நினைத்தால் ஒவ்வொரு மனிதர்களுக்கும் நீ மாற வேண்டிவரும் – கண்ணதாசன்

40 செடிகள் அமைக்கலாம். வீட்டின் பின்புறம் அமைக்க எண்ணுவோர், சமையல் அறையில் இருந்து வெளியேரும் கழிவு நீரைப் பயன்படுத்தலாம். ஓவ்வொரு காய்கறிகளிலும் சராசரி 5 செடிகள் இருப்பது நல்லது. அதாவது வெண்டை-5 செடிகள், கத்தரி-5 செடிகள், தக்காளி -5 செடிகள், கொத்தவரை-5 செடிகள், மிளகாய்-5 செடிகள், முள்ளங்கி-5 செடிகள், அவரை-5 செடி / கொடிகள், பாகல்-3 கொடிகள், புடலை-2 கொடிகள், சுரக்காய்-2, பரங்கி-2, மற்றும் கீரைப் பயிரிடலாம். இவ்வாறு திட்டமிடும் போது நான்கு நபர்கள் கொண்ட குடும்பத்திற்கு தேவையான காய்கறிகள் கிடைக்கும். இடவசதியை பொறுத்து, ஒரு முருங்கை, ஒரு பப்பாளி, ஒரு கொய்யா, ஒரு மாதுளை, ஒரு நெல்லி மரம் வைக்கலாம். மணத்தக்காளி, சுண்டை செடிகளும் வைத்து பயன்பெறலாம்.

கீரைகள் உடல்நலத்திற்கு நல்லது. எனவே ஏதாவது ஒரு கீரை ரகத்தை பயிரிடுதல் நல்லது. அரைகீரை, முளைக்கீரை, சிறுகீரை, பாலக்கீரைகள் பயிரிடலாம். கீரைகள் 25 நாட்களில் (பூ பூக்கும் முன்பு அறுவடை செய்ய வேண்டும்.) அறுவடைக்கு தயாராகும். எளிதாக பயிரிடக்கூடியது என்பதால் ஒவ்வொரு மாதமும் தேவைக்கேற்ப இடத்தை தீர்மானித்து உற்பத்தி செய்தால் நஞ்சற்ற கீரைகள் கிடைக்கும்.

அனைத்துக்கும் நீர் தேவை அவசியம் என்பதால் அதற்கேற்றபடி செடிகள் மற்றும் கொடிகள் அமைத்தல் நல்லது. சிறிய அளவில் ஆரம்பிக்க எண்ணும் குழந்தைகள் முதலில் 5- 10 தொட்டிகள் அல்லது பைகளில் வளர்த்தல் நல்லது.

காய்கறி தோட்டம் அமைத்த பின் தொடர் கண்காணிப்பில் இருக்கவேண்டும்.

வீட்டில் உள்ள மக்கும் குப்பைகளை மக்கு எருவாகவும் மண்புழு எருவாகவும் தயாரிக்கலாம். இதனால் மண்புழு எரு வாங்கவேண்டியது இல்லை. செலவு மிச்சம், சுற்றுசுழல் பாதுகாப்பாக இருக்கும்.

மஞ்சள் வண்ண பூக்கள் வளர்ப்பதால் பூச்சி கட்டுப்படுத்தப்படுகிறது. பழைய தகரடப்பாவில் மஞ்சள் பெயின்ட் அடித்து அதில் விளக்கெண்ணை அல்லது கீரிஸ் தடவி ஒரு குச்சியில் மாட்டிவிட்டால் இனகவர்ச்சி பொறியாக செயல்பட்டு பூச்சிகளை அழிக்கும்.



### 10. இயற்கையாக வளர்த்தெடுக்கப்படும் காய்கறிகளின் குணாதிசங்கள் என்ன?



இயற்கையாக விளையும் காய்கறிகள் சுவையாக இருக்கும். காய்கறிகள் செழிப்பாக இருக்கும். ஒரு வாரம்வரை கூட காய்கறிகள் புத்தம் புதியதாக இருக்கும். குளிர்சாதன பெட்டியில் வைத்து பாதுகாக்க தேவையில்லை. தேவையான போது மாடியில் இருந்து பறித்துக் கொள்ளலாம். இராசயணம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்படுத்தப்படும் காய்கறிகள் விரைவில் கெட்டுப்போகும்.

### 11. காய்கறிகளை எவ்வாறு உண்பது நல்லது?

சில காய்கறிகளை பச்சையாகவும் உண்ணலாம். காய்கறிகள் உண்ணும் போது அரைவேக்காடாக இருப்பது நல்லது.

### 12. மாடித் தோட்டம் அமைக்க அரசு மானியங்கள் உண்டா?

மாடித்தோட்டம் அமைக்க அரசு தோட்டக்கலை மூலம் மானிய திட்டம் உள்ளது. ரூ. 500க்கு தளை (Kit) வழங்கப் படுகிறது. 5 பாலிதீன் பைகள், விதைகள், உரங்கள் கிடைக்கப் பெறலாம். (அரசு மானியத்தில் ஒரு சில இரசாயண உரங்கள் உள்ளது. அவைகளை நீக்கிவிட்டு இயற்கை முறையில் பயிரிடலாம்). அருகில் உள்ள தோட்டக்கலைத் துறையை அணுகவும். மானியதிட்டம் சில மாதங்கள் மட்டுமே இருக்கும். தோட்டக்கலைத்துறை செய்திதாள் மூலம் விளம்பரம் செய்வார்கள்.

### 13. இளையோருக்கு நீங்கள் கூறும் 2017-ஆம் ஆண்டுக்கான செய்தி என்ன?

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், உணவே மருந்து மருந்தே உணவு என்று முன்னோர்கள் கூறிய பொன்மொழிகேற்ப நஞ்சில்லா காய்கறி உற்பத்தி செய்து ஆரோக்கியமான எதிர்காலம் அமைய அனைத்து இளையோர்களும் தங்களால் இயன்ற வரை இயற்கை முறை காய்கறி உற்பத்தியில் ஈடுபட வாழ்த்துக்கள்.

மாடித்தோட்டம் குறித்து மேலும் விபமறிய தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

இடம்: 58, நேரு நகர், அய்மான் கல்லூரி அருகில், கே.சாத்தனூர், (கே.கே. நகர் அருகில்) திருச்சி-21.

தொலைபேசி: **98428 33187**

(ஜா. பங்கயவல்லி or பாப்பி)

நேரில் பார்வையிட விரும்புவோர் ஞாயிற்றுகிழமைகளில் பார்வையிடலாம்.

பயிற்சி பெற விரும்புவோர் அனுகவேண்டிய முகவரி

**குடும்பம் தொண்டு நிறுவனம்**

116, சுந்தர்ராஜ் நகர், சுப்ரமணியபுரம், திருச்சி - 20

தலைவர்கள் அறிவோம்

# மகா கவி பாரதியார்

## வரலாற்று நாயகர்



காக்கைச் சிறகினிலே நந்தலாலா
நின்றன் கரியநிறம் தோன்றுதையே நந்தலாலா!

நல்லதோர் வீனை செய்து அதை
நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ!

நெருங்கின பொருள் கைபடவேண்டும்
மனதில் உறுதி வேண்டும்!

வட்டக் கரிய விழியில் கண்ணம்மா
வானக் கருணைக் கொள்!

இந்த அழகிய வரிகள் எல்லாவற்றுக்குமே ஓர் ஒற்றுமையுண்டு. அவை அனைத்துமே ஒரே பேனாவில் இருந்து உதிர்ந்த வரிகள். அமரகவி என்று அழைக்கப்பட்ட ஒரு கவிஞரால் வடிக்கப்பட்ட கவிதைகள், சினிமாப் பாடல்களாக வந்ததால் அவை பெரும் புகழ் பெற்றன. ஆனால் சினிமா நமக்குக் காட்டாத இன்னும் பல அரிய கவிதைகளை தமிழ் உலகுக்கு தந்திருக்கிறார் அந்த அமர கவி. அவர்தான் மீசைக் கவிஞன் என்றும், முண்டாசுக் கவிஞன் என்றும் தமிழ் இலக்கிய உலகம் போற்றும் மகாகவி பாரதியார்.

1882ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் தேதி தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரம் என்னும் ஊரில் சின்னச்சாமி அய்யருக்கும், இலக்குமி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார் பாரதியார். அவருக்கு பெற்றோர் இட்ட பெயர் சுப்ரமணியன். சுப்பையா என அவரை செல்லமாக அழைத்தனர். சுப்பையாவுக்கு 5 வயதான போது அவரது தாயார் இறந்து போனார். 2 ஆண்டுகள் கழித்து தந்தையார் மறுமணம் செய்து கொண்டார். சிறு வயதிலிருந்தே சுப்பையாவுக்கு மொழி மீது சிறந்த பற்றும் புலமையும் இருந்தது.

7-வது வயதிலேயே அவர் கவிதைகள் எழுதத் தொடங்கினார். அவருக்கு 11 வயதானபோது அவரது கவிபாடும் ஆற்றலையும் புலமையையும் வியந்து பாராட்டி அவருக்கு பாரதி என்ற பட்டத்தை வழங்கினார் எட்டயபுர மன்னர். அன்றிலிருந்து அவர் பெயர் சுப்ரமணிய பாரதி என்றானது. பாரதி தமிழும் கவிதையுமாக தமிழுலகில் சஞ்சரித்துக் கொண்டிக்க, அவரது தந்தையோ தனது மகன் தொழில் நுட்பத் துறையில் தேர்ச்சி பெற வேண்டும் என விரும்பி அவரை தமிழ்ப்பள்ளியில் சேர்க்காமல், ஆங்கிலமும் கணிதமும் பயில்வதற்காக திருநெல்வேலிக்கு அனுப்பி வைத்தார்.

அங்கு சென்று கல்வி பயின்றார் பாரதி. படித்துக் கொண்டிருந்தபோதே செல்லம்மாள் என்ற பெண்ணை திருமணம் செய்து வைத்தார் தந்தை. ஆனால் பின்னாளில் இதுபோன்ற பால்ய விவாகத்தை வன்மையாகக் கண்டித்தார் பாரதி. பாலருந்தும் மழலையர் தம்மையே கோலமாக மணத்திடைக் கூட்டும் இப்பாதகர்கள் இன்னும் ஆயிரமாண்டு அடிமைகளாக இருந்து அழிவர் என்று சபித்தார். நல்ல நிலையில் இருந்த பாரதியின் தந்தை எட்டயபுரத்தில் பருத்தி அரவை ஆலை நிறுவ விரும்பினார். அந்த ஆலைக்காக வெளிநாட்டிலிருந்து கப்பல்களில் வந்து கொண்டிருந்த இயந்திரங்களும் உதிரிப் பாகங்களும் கடலில் மூழ்கவே அவருக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது.

அந்த கவலையிலிருந்த மீள முடியாமல் நோய்வாய்பட்டு அவர் இறந்து போனார். அப்போது பாரதிக்கு வயது பதினாறு. தந்தையின் மறைவிற்குப் பிறகு பாரதியின் குடும்பத்தில் வறுமை வந்த சேர்ந்தது. பிறகு காசிக்குச் சென்று அலகாபாத் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து சமஸ்கிருதத்தையும் இந்தியையும் கற்றார். சமஸ்கிருத மொழியில் முதல் வகுப்பில் தேறினார். ஆங்கிலக் கவிஞரான ஷெல்லி, பைரன் போன்றோரின் கவிதைகளில் அவருக்கு அதிக ஈடுபாடு ஏற்பட்டது. அதன் காரணமாக அவர் பின்னாலில் ஷெல்லிதாசன் என்ற புனைப்பெயரில் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

பெண்ணடிமை தீருமட்டும் பேசும் இத்திருநாட்டில்
மண்ணடிமைதீருதல் முயற்கொம்பே – என
பெண்ணுரிமையை ஏத்தினார்.

போற்றி போற்றியோராயிரம் போற்றி நின்
பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றிகான்
என்ற பாரதி பெண்மை வாழ்கவெனக் கூத்திடுவோமடா என்றார்.

பெண்களின் கல்வியறிவுக்காகச் சட்டங்களைச் செய்திடவும் கனவு கண்ட பாரதி, சாதம் படைக்க மட்டுமல்லாது தெய்வச் சாதி படைக்கவும் பெண்கள் தகுதி படைத்தவர்கள் என்று கண்டார்.

பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடல்களின் இலக்கணக் கட்டுரைகளைக் தகர்த்தெறிந்தவன். இவருக்கு முன்பாக கவிபுனைந்த கவிஞர்கள் தொல்காப்பிய இலக்கணம் சிறிதும் வழுவாமல், பொருள் கொள், யாப்பு, அணி என இலக்கணத்தில் கட்டுண்டு கற்றோர் மட்டும் கற்றறியும் கவிதைகளையே புனைந்தார்கள். இலக்கணச் சட்டங்களைத் தகர்த்தெறிந்த பாரதி, புதுக் கவிதை எனப் புகழப்படும், பாமரரும் கேட்டுணரும் வசனக் கவிதையைத் தமிழுக்கு தந்தவர். கேலிச்சித்திரம் (caricature) எனப்படும் வரையும் முறையை தமிழுக்கு முதலில் தந்த பெருமை பாரதியையே சாரும்.

இந்தி, சமஸ்கிருதம் தவிர்த்து ஆங்கிலம், பெங்காலி, போன்ற மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார் பாரதி. அத்தனை மொழிகளில் புலமைப் பெற்றிருந்ததால்தான் **யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது**




**எங்கும் காணோம்** என்று துணிந்து சொன்னார் பாரதி. தீண்டாமையை அறவே வெறுத்தவர் பாரதி. அதற்குத் தன்னையே முன் உதாரணமாக்கிக் கொண்டார். தீண்டாமை எனும் கொடுமைக்கு ஆளானோரிடம் அன்பு செலுத்தியதோடு அவர்களுக்கு இல்லாதது தனக்கு வேண்டியதில்லை என்று கூறி தான் அணிந்திருந்த பூநூலை அறுத்தெறிந்தார்.

நான்கு ஆண்டுகள் காசியில் இருந்துவிட்டு திரும்பிய பாரதி எட்டயபுர மன்னரின் அழைப்பை ஏற்று அரசவை கவிஞராக பணியாற்றினார். 1903ஆம் ஆண்டு 21ஆவது வயதில் அவரது எழுத்துக்கள் முதன்முதலில் அச்சில் வந்தன. அதற்கு அடுத்த ஆண்டு மதுரை சேதுபதி பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். அதன்பின்னர் சுதேசமித்திரன் பத்திரிக்கையின் துணை ஆசிரியராக பொறுப்பேற்றார். 1905ஆம் ஆண்டு சுதந்திர வேட்கைக் காரணமாக அரசியலில் பிரவேசிக்கத் தொடங்கினார் பாரதி.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யுடன் அவருக்கு நெருங்கியத் தொடர்பு ஏற்பட்டது. சகோதரி நிவேதிதாவை சந்தித்த பாரதி அவரையே தனது ஞானகுருவாக ஏற்றுக் கொண்டார். 1907ஆம் ஆண்டில் இந்தியா என்ற வாரஏட்டையும், பாலபாரதம் என்ற ஆங்கில இதழதையும் பொறுப்பேற்று நடத்தினார். அப்போது பாரதியின் கவனம் இந்திய சுதந்திர போராட்டத்தின் பக்கம் திரும்பியது. சுதந்திரத்தை வலியுறுத்தும் கட்டுரைகளையும் தலையங்கங்களையும் பிரசுரித்தார். வ.உ.சி.க்கு விதிக்கப்பட்ட இரட்டை ஆயுள் தண்டனையை கடுமையாகக் கண்டித்து கட்டுரைகள் எழுதினார்.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கவனம் பாரதி பக்கம் திரும்பியது. பாரதியை கைது செய்ய முனைந்தனர். அதனையறிந்த பாரதி தன் நண்பர்களின் வற்புறுத்தலின் பேரில் ஃப்ரெஞ்சு நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் அமைந்த பாண்டிச்சேரியில் சில காலம் தலைமறைவாக வாழ்ந்தார். அவ்வாறு வாழ்ந்தபோதுதான் கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற புகழ்பெற்ற அமரக் கவிதைகளை எழுதினார். அதோடு 1912ஆம் ஆண்டு பகவத் கீதையை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார் பாரதி. பாண்டிச்சேரியில் இருந்தவாறே அவர் இந்தியா பத்திரிக்கையின் மூலம் தொடர்ந்து சுதந்திர வேட்கையைத் தூண்டிவிடும் கட்டுரையை எழுதினார்.

பாரதியின் குரலுக்கு தமிழ்நாட்டில் ஆதரவு பெருகுவதைக் கண்ட பிரிட்டிஷ் ஆட்சி இந்தியா பத்திரிக்கைக்குத் தடை விதித்தது. 1918ஆம் ஆண்டு பாண்டிச்சேரியில் இருந்து வெளியேறிய பாரதி தமிழ்நாட்டு எல்லையில் பிரிட்டிஷ் போலீசாரால் கைது செய்யப்பட்டு 34 நாட்கள் காவலில் வைக்கப்பட்டு பிறகு விடுவிக்கப்பட்டார். விடுதலையானதும் கடையம் எனும் ஊரில் குடியேறினார் பாரதி. அங்கு வறுமையில் வாடிய அவர் தனது சிரமத்தை விவரித்து எட்டயபுரம் மன்னருக்கு கடிதம் எழுதினார். ஆனால் பாரதிக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை.

பாரதியின் மனைவி செல்லம்மா வீட்டின் வறுமை தெரியாமல் கணவரைப் பராமரித்தார். பாரதிக்கு அத்தகைய மனைவி வாய்த்ததால்தான் குடும்ப கவலையே இல்லாமல் தமிழ் பணியிலும், பொதுவாழ்விலும் ஈடுபட முடிந்தது. வறுமையில் கூட பாரதியிடம் தன்மானமும் செருக்கும் இருந்தது. பொதுவாக கொடுக்குற கை மேலேயும் வாங்குகிற கை கீழேயும் இருக்கும். ஆனால் அந்த இலக்கணத்தையும் மாற்றினார் பாரதி. ஒருமுறை அவரின் பணக்கார நண்பர் தட்டில் பணமும் பட்டாடையும் வைத்து பாரதியிடம் நீட்டினார். தட்டை உமது கையிலேயே வைத்திரும் என்று கெம்பீரமாய் சொன்னபடி தமது கைகளால் அவற்றை எடுத்துக் கொண்டாராம் பாரதி.

கவிராஜன் என்பதால் அத்தனை மிடுக்கு என்று கூறுகிறது ஒரு குறிப்பு. மனிதர்களுக்கு மட்டுமல்ல, எல்லா உயிர்களுக்கும் வயிறு நிறைய வேண்டும் என விரும்பியவர் பாரதி. அதனால் வீட்டில் செல்லம்மாள் வைத்திருந்த கொஞ்சம் அரிசியையும் காகங்களுக்கு வாரி இறைத்துவிட்டு மதியம் உண்ண உணவு இல்லாமல் அவர் பசியோடு இருந்த நாட்களும் உண்டு. காக்கை குருவி எங்கள் ஜாதி என்று பாடியவராயிற்றே அவர். ஒரு சமயம் நண்பர் ஒருவர் தமக்கு அளித்த பட்டாடையை வழியில் மேலாடையின்றி அவதிப்பட்ட ஓர் ஏழைக்குப் போர்த்தி மகிழ்ந்தார் பாரதி.

இப்படித் தாம் வறுமையில் வாடியபோதுகூட மற்றவர்களுக்கு வாரி வழங்கினார் அந்த மகாகவி. ஆனால் அவரது வாழ்க்கையில் வறுமையைத் தந்த இயற்கை அவரது ஆயுளிலும் தாராளம் காட்ட மறுத்துவிட்டது. 1921ஆம் ஆண்டு ஜூலை மாதம் தான் வழக்கமாக செல்லும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலுக்கு சென்றார் பாரதி. எதிர்பாராதவிதமமாக அந்த கோவில் யானை அவரைத் தூக்கி எறிந்தது. அதனால் பலத்த காயமுற்று நோய்வாய்பட்டார். சிறிது நாட்களில் வயிற்றுக் கடுப்பு நோயால் அதியுற்று அதே ஆண்டு செப்டம்பர் 11ஆம் தேதி தனது 39ஆவது வயதில் காலமானார் பாரதி.

இளம் வயதிலேயே அவர் மாண்டது அவலம் என்றால் அதைவிட இன்னும் ஒரு சோகமான நிகழ்வை கவிராஜன் கதை என்ற தனது நூலில் குறிப்பிடுகின்றார் கவிஞர் வைரமுத்து. பாரதியின் இறுதி ஊர்வலத்தில் மிகச் சிலரே கலந்து கொண்டனர். அதனைக் குறிப்பிடும்போது: இறுதி ஊர்வலத்தின் எண்ணிக்கை இருபதுக்கும் குறைவாக இருந்ததாம். தோழர்களே, மகாகவிஞனுக்கு மரியாதை பாரத்தீரோ! அவன் உடம்பில் மொய்த்த ஈக்களின் எண்ணிக்கையில்கூட ஆட்கள் இல்லையே!

தமிழ் பாரதிக்கு கிடைத்த வரம்,பாரதி தமிழுக்குக் கிடைத்த வரம். பாரதி குழந்தைகளுக்காகப் பாடினார். பெண்களின்



முன்னேற்றத்திற்காகப் பாடினார், அறியாமை நீங்கவும் ஜாதி வெறியைச் சாடவும், நாடு விடுதலைப் பெறவும் பாடினார். அந்தத் தீர்க்கதரிசியின் பல கனவுகள் பலித்தன. அவர் இன்னும் அதிக காலம் வாழ்ந்திருந்தால் தமிழ் இன்னும் வளம் பெற்றிருக்கும். தமிழனும் வளம் பெற்றிருப்பான். மனித நேயமும் பெண் முன்னேற்றமும் ஜாதி ஒழிப்பும் சமத்துவமும் வறுமை ஒழிப்பும்தான் பாரதியின் வாழ்க்கைக் கனவுகளாயின. அந்தக் கனவுகள் மெய்ப்படும் என்ற தன்னம்பிக்கையை அவர் எப்போதுமே இழந்ததில்லை.

நமக்கும்கூட அந்த விதி பொருந்தும். நாம் விரும்பும் இலக்கை நோக்கி தன்னம்பிக்கையோடு பயணித்தால் நாம் விரும்பும் வானம் நமக்கும் வசப்படும் என்பதுதான் பாரதியின் 39 ஆண்டு கால வாழ்க்கை நமக்குச் சொல்லும் முக்கிய பாடம். நாமும் வாழ்க்கையில் தன்னம்பிக்கையோடும் விடாமுயற்சியயோடும் போராடினால், நமக்கும் நாம் விரும்பும் வானம் வசப்படாமலாபோகும்.

தேடிச் சோறு நிதம் தின்று – பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி – மனம்
வாடித் துன்பமிக உழன்று – பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து – நரை
கூடிக் கிழப்பருவமெய்தி – கொடுங்
கூற்றுக் கிரையனப்பின் மாயும் – பல
வேடிக்கை மனிதரைப் போல – நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ?

**பயிற்சியும் முயற்சியும் இருந்தால்**
**ஒவ்வொரு மனிதனும்**
**சாதனையாளனே!**



நன்றி:

**திரு. அழகிய பாண்டியன்**
ஒலி 96.8, வானொலி சிங்கப்பூர்

# கனவு இதழின் சொந்தக்காரர்கள் இவர்கள்

## DREAM Quarterly Magazine - PATRONS 2016

| Sl. No. | Name | Place |
|---|---|---|
| 1 | Mr. Antony Balmin Jose G | Vattakarai, KK Dist |
| 2 | Mr. Antony Xavier M | Chettikulam, Nagarcoil, KK Dist |
| 3 | Mr. Arasan S. Ponnraj | Nagarcoil, KK Dist |
| 4 | Mr. Arun Prasath C | K K Nagar, Trichy |
| 5 | Mr. Benti Cruz A.S | Toronto, Canada |
| 6 | Mr. Britto J | Sagayanagar, KK Dist |
| 7 | Ms. Chandra | Nilakottai |
| 8 | Mr. Daniel Gunanidhi | Thiruvannamalai |
| 9 | Mr. Durai Raj M.P.K | Secretary, ROSED, Musari |
| 10 | Mr. Hamlet Moni D | Maravankudieruppu, KK Dist |
| 11 | Ms. Helen Viji | Palliyadi, KK Dist |
| 12 | Ms. Jasmine Rani K | Maravankudieruppu, KK Dist |
| 13 | Mr. Jerald M.S | Nagappattinam |
| 14 | Mr. John Bennet P | Nagarcoil, KK Dist |
| 15 | Mr. John Densingh C | Conam Palliadi, KK Dist |
| 16 | Mr. Knox JR | Maravankudieruppu, KK Dist |
| 17 | Fr. Leon Henson S | Christu Nagar, Nagercoil, KK Dist |
| 18 | Mr. Louis A Sahayam | Maravankudieruppu, KK Dist |
| 19 | M/s. Nila Studio | Palliady, KK Dist |
| 20 | Mr. Oswald Quintal | Ponmalaipatti, Trichy |
| 21 | Dr. Paul. C.J | Kerala |
| 22 | Lr. A. Lawrence Peter Shaw | Mel Ramanputhur, KK Dist |
| 23 | Mr. Prakash JK | Kurusadi, Nagercoil, KK Dist |
| 24 | Fr. Robinson J | Kuzhithurai Diocese, KK Dist |
| 25 | Ms. Selva Saroja | Palliyady, KK Dist |
| 26 | Ms. Shekina Evelin C | Cuddalore |
| 27 | St. Aloysius Hr. Sec. School | Christu Nagar, Nagercoil, KK Dist |
| 28 | Ms. Susannah Mary D | Maravankudieruppu, KK Dist |
| 29 | Mr. Thomaiyar. G | K.K. Nagar, Trichy |
| 30 | Mr. Thomas Xavier J.R | Maravankudieruppu, KK Dist |
| 31 | Mr. Vidya Sagar. J | Thiruvannamalai |
| 32 | Ms. Vijila A.S | Mulagumoodu, KK Dist |
| 33 | Ms. H. Esther Rani | Tirukoilur |
| 34 | Mr. C.Elumalai | Tiruvannamalai |
| 35 | Mr. Muthu Krishnan | Karaikkal |
| 36 | Mr. Nel Jeya Raman | Thiruthuraipoondi |
| 37 | Mr. K. Murali | Kumbakonam |
| 38 | Mr. M.G. Francis Xavier | Pondicherry |
| 39 | Mr. V.J. Ravi | Pondicherry |
| 40 | Mr. E. Adrien Pelerin | France |

**கனவு இதழ் உங்களை நெஞ்சார வாழ்த்துகின்றது.**
**உங்களின்அர்ப்பணிப்பு அளவிடற்கரியது!**
**கடினமான உழைப்பிலிருந்து உதவுகின்றீர்கள்!**
**உங்களால் இளைய சமுதாயம் நிச்சயமாக மேன்மை பெறும்.**
**உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் எங்கள் நன்றிகள் பல...!**

சிக்கலான பிரச்சனை வரும்போது சிங்கம்போல சிலிர்த்து எழுங்கள்...
நரிகள் வலைகளைத் தேடுவது போல ஓடாதீர்கள்...

# விஷன் இளையோர் திறன் சங்கமம்

## 26.11.2016

## Visions Youth Talents Meet

இளையோர்களிடம் புதைந்து கிடக்கும் அபரிமிதமான திறன்களை வெளிக்கொண்டு வரவும், அந்த திறன்களை தன்னுடைய வளர்ச்சிக்காகவும் சமூக மேம்பாட்டிற்காகவும் பயன்படுத்திட அவர்களை உற்சாகப்படுத்திடவும் விஷன் இளையோர் திறன் சங்கமம் நிகழ்வு நவம்பர் 20–ஆம் தேதி திருக்கோவிலூரில் நடைபெற்றது.














18 கிராமங்களில் இருந்து 139 இளையோர்கள் திறன் சங்கமத்தில் பங்கேற்றனர். 60 கி.மீ. தூரத்தில் உள்ள கிராமங்களிலிருந்து இளையோர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டதும், காலை 9 மணிக்கெல்லாம் தங்கள் பெயர்களை பதிவுச் செய்துக் கொண்டதும் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

பாட்டுத் திறன், பேச்சுத் திறன், எழுத்துத் திறன், ஓவியத்திறன்களை வெளிக்கொண்டு வரும் விதத்தில் போட்டிகள் நடைபெற்றன.

இளையோர்களை கிராம விஷன் பணியாளர்கள் மிகவும் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தார்கள்.

காலை 9 மணிக்கு பெயர் பதிவுடன் ஆரம்பமாகிய நிகழ்வு மாலை 4 மணிக்கு நிறைவு பெற்றது.

மாலையில் நடைபெற்ற நிகழ்வில் இளையோர்கள் தங்களது நடனத் திறமையையும் வெளிப்படுத்தினர்.

சங்கமம் – நிகழ்வுக்கான செலவுகள் அனைத்தையும் பங்கேற்பாளர்களே ஏற்றுக் கொண்டது இதன் தனிச் சிறப்பாகும். பரிசுகளை பணியாளர்கள் திருமதி. அம்பிலி, திரு. சகாயராஜ், திரு. ஷைலட் மோனி ஆகியோர் நல்ல இதயங்களிடமிருந்து நன்கொடைகளாகப் பெற்றுத் தந்தனர்.

இளையோருக்கு மிகவும் உற்சாகம் அளிப்பதாக அமைந்ததுடன் தங்களது திறமைகளையும் இவர்கள் இனங்கான உதவியது.

**விஷன் திறன் சங்கமத்தின் - சாம்பியன் கப்பை அழகானந்தல் கிராமம் தட்டிச் சென்றது.**




**பரிசுகள் பெற்ற இளையோர் கொண்ட மனமகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.**








விஷன் இளையோர் திறன் சங்கமம் – ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் நடத்துவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.






# Excel™ GROUP INSTITUTIONS

SRET EXCEL

Approved by AICTE, CoA, NCTE, New Delhi & Affiliated to Anna University, TNTEU, DoTE, Chennai

Ranked 5th among the Top Engineering Colleges in Tamilnadu by Silicon India survey 2015

எக்ஸல்™

## B.E

AERO MECH CIVIL
ECE EEE CSE IT
PETROLEUM ENGINEERING
PETROCHEMICAL TECHNOLOGY

Counseling Code 2634 2664

18 University Ranks in ECE, IT, MBA & University 2nd Rank in Aeronautical



## M.E

- Aeronautical Engineering
- CAD & CAM
- Engineering Design
- Thermal Engineering
- Industrial Safety Engineering
- Environmental Engineering
- Structural Engg.
- VLSI Design
- Embedded System
- Applied Electronics
- Power Electronics & Drives
- Computer Science Engineering

31 Years Experience in TECHNICAL EDUCATION

## Counseling Code 2667

2 University Ranks

B. ARCH / M. ARCH

Nata Approved Exam Centre @ Excel Campus

## Counseling Code 503

30 University Ranks

MBA 2 years MCA Lateral - 2 years

## MBA

5 years from +2

B.A.,B.Ed., & B.Sc.,B.Ed., 4 years

B. PHARM*

PHYSIOTHERAPY*

3 / 2 Years Diploma Courses

5 State Ranks

AUTO | MECH | CIVIL

DECE | DEEE

B.Ed. M.Ed.

901 Students Placed academic year 2015 -2016

NAAC accredited with "A" Grade

Excel Engineering Colleges - 507 Students Placed

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 Infoview | 3 Cognizant | 1 Auriga IT | 1 ExcelaCom | 5 L&T Infotech | 2 QUEST |
| 18 SUTHERLAND | 3 iNET | 2 | 8 SHRIRAM | 1 Vinayak Infotech | 12 |
| 1 aspire SYSTEMS | 6 digital nirvana | 8 TNQ | 23 | 3 | 4 UNIQUE SOFTWARE TECHNOLOGY |
| 1 RiDSYS | 6 | 21 HICITIZEN LIFE SKILLS | 28 Schneider Electric | 99 CRI | 15 ALLSEC TECHNOLOGIES |
| 2 TENNECO | 27 | 91 Zealous | 1 airtel | 57 SL Corporation | 21 Indo Shell Mould Limited |
| 22 | 1 Valued Epistemics | 1 HITECH COMMUNICATIONS | 1 indus | 3 pricol | 5 |

NH - 47, Salem Main Road, Pallakapalayam, Sankari West Post, Komarapalayam Tk. - 637303, Namakkal Dt.,
Near Erode / Bhavani, Ph: +91 4288 227361 to 67, Cell: 98427 13789, 99655 33370
Email: exceladmission@gmail.com, Web: www.excelinstitutions.com



கனவு

Communication Address:

Mr. D. Shylet Moni
Chief Editor

Visions Global Empowerment India
First Floor, 27, Wireless Road, Kurinji Nagar West,
K.K. Nagar, Trichy - 620 021. Cell: 89400 51900